பக்கங்கள்: 20 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 13, புதன்கிழமை 26.04.2017 | கதிர் 171

உங்கள் மனம் விரும்பும்
வேலைவாய்ப்பை
உடன் பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
Fb : winstarjob bank
021 320 2789
(அ/366)

# படைகளுக்குக் காணி அதிகாரமா? சீறுகிறது தமிழ் மக்கள் பேரவை!

## கொடிகாமத்தில் வாள்வெட்டு: இருவர் படுகாயம்

கொடிகாமம் - மந்துவில் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர் எனக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். படுகாயம

பக்கம் 18 »

## நாளைய மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவும் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

**காணி விடுவிப்புக் குறித்து முடிவெடுக்கவேண்டிய நிறைவேற்று அதிகாரம் அரசுக்கு உரியது. அதனை இராணுவத்துக்கு வழங்கி, அதிலும் இனப்படுகொலை புரிந்தவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இராணுவக் கட்டமைப்புக்கு ஒரு சிவில் நிர்வாக அங்கீகாரத்தைக்கொடுத்து, பாதிக்கப்பட்ட மக்களை இராணுவத்தோடு கலந்துபேசி, அவர்கள் தருவதைப் பெறுமாறு கூறியிருப்பது நீண்டகால நோக்கில் மிக அபாயகரமான திட்டத்தின் ஒரு பகுதியேயாகும். 'சிவில் நிர்வாகத்தின் பிரிக்க முடியாத ஒரு கட்டமைப்புத்தான் இராணுவம்' என்பதை இதன்மூலம் எம்மை ஏற்கவைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.**

**- இவ்வாறு காட்டத்துடன் கூறியிருக்கின்றது தமிழ் மக்கள் பேரவை.**

நாளை நடைபெறவிருக்கும் மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பேரவை நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழர் தாயகமெங்கும் கருக்கொண்டிருக்கும் மக்கள் போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுத் தாயகம் தழுவிய மக்கள் போராட்டமாகப் பரிணமிக்க

பக்கம் 18 »

## வடக்கும், கிழக்கும் நாளை முடங்கும்!

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு, கிழக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களின் நிலங்களை மீட்கவும், காணாமலாக்கப்பட்ட தங்களது உறவுகளைக் கண்டுபிடிக்கவும் கோரிப் பரவலாக நடைபெற்றுவரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து நாளை நடத்தப்படவிருக்கும் கடையடைப்பு மற்றும் ஹர்த்தாலுக்குப் பரவலாக ஆதரவு வலுத்து வருகின்றது. இந்தப் போராட்டத்தால் வடக்கும், கிழக்கும் நாளை முற்றாக முடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்துக்குத்

பக்கம் 18 »

## செட்டிகுளம் உணவகத்தில் தீ!

வவுனியா - செட்டிகுளம் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள உணவகமொன்றில் நேற்றிரவு 8 மணியளவில் ஏற்பட்ட தீயின் காரணமாக

பக்கம் 18 »

## காணி விடுவிப்புக்கு இராணுவத்துடன் ஏன் பேச்சு?



### சுரேஷ் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களிடம் இருந்து சட்டவிரோதமாகச் சுவீகரித்து, தற்போது படையினர் வைத்திருக்கும் காணிகளை மீளவும் அம்மக்களிடம் கையளிப்பதைக் காலம் கடத்துவதற்கு அரசாங்கம் இராணுவத்தைக் கொண்டு முயற்சித்து வருவதாக

பக்கம் 18 »

## இதன் பின்னும் தீர்வு வழங்காவிடில் ஜனநாயக அறவழிப் போராட்டம்

### அரசுக்கு முன்னறிவிப்புக் கொடுக்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஏப். 26

"நாளைய மக்கள் போராட்டத்தின் பின்னரும் இந்த விடயங்களுக்கு உரிய தீர்வை அரசு வழங்காமல் விட்டால், அரசியல் மற்றும் சமூக நிறுவனங்கள் ஒன்றுகூடி ஜனநாயக அறவழிப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டிவரும் என அரசுக்கு அறிவிக்கின்றோம்."

நாளைய மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துத் தாம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு :-



பக்கம் 18 »

## வன்னிப் பண்ணைக் காணிகளை விடுவிக்க படையினர் நிபந்தனை?

கொழும்பு, ஏப். 26

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் 11 ஆயிரம் ஏக்கர் பண்ணைக் காணிகளையும் வடக்கு மாகாணசபையிடம் கையளிப்பதற்குத் தயார் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, அதற்கு நிபந்தனை ஒன்றை விதித்துள்ளதாம் என செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விவசாயப் பண்ணைகளில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த 11

பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்



அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு எண்டு நாளைக்குக் காட்டவேணும் பாருங்கோ...!

## வடக்கிற்கு இந்த வருடம் மேலும் 21 அம்புலன்ஸ்கள்

யாழ்ப்பாணம், ஏப். 26

வடமாகாணத்தின் தேவைக்காக மேலும் நோயாளிகளைக் காவிச் செல்லும் 21 வண்டிகள் (அம்புலன்ஸ்கள்) அரசாங்கத்தால் வழங்கப் படவுள்ளன என வடமாகாணசுகாதாரஅமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டிற்கான மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து, கொள்வனவு செய்யப்பட்ட நோயாளர் காவு வண்டிகளைக் கையளிக்கும் நிகழ்வு, நேற்று யாழ். பண்ணையில் அமைந்துள்ள வட மாகாண சுகாதார அமைச்சின்

பக்கம் 18 »



சன்சிகா நகையகம்

அன்றைய தினத்துக்காக...
- அக்சய திருதியை முன்னிட்டு அதி நவீன டிசைன்கள் அறிமுகம் செய்வதோடு, அதற்கான விலையில் கழிவுகளும் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
- குறிப்பிட்ட சில நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்.
- அன்றைய தினம் சிரமத்தினை தவிர்த்துக் கொள்ள முன்கூட்டியே ஆபரணங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- அக்சய திருதியை அன்று எமது காட்சியறை காலை 7.30 தொடக்கம் இரவு 8.30 வரை உங்களுக்காக திறந்திருக்கும்.

குறையாத செல்வத்தை வளமாக
அள்ளித் தரும் அதிசய திருநாளாம்
அக்சயதிருதியை
எதிர்வரும் 28,29.04.2017 சனிக்கிழமை
காலையில் சுபநேரத்தில் வரும் இத்
திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை
உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை
சன்சிகா நகையகத்தில்
வாங்கி மகிழுங்கள்



www.sanshigaa jewelhouse.com | 114, பஜார் வீதி, வவுனியா. | 024 - 2224028
(அ/374)

# அடையாளம் காட்டும் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளில் அடையாளம் காணப்படும் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினர் வசமுள்ள காணிகளில் சுமார் 75 வீதமான காணிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.ஆர். ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

எஞ்சியுள்ள காணிகளில் பெரும்பாலானவை அரச காணிகள் என்றும் அவர் கூறினார்.

மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து, அடையாளம் காணப்படும் காணிகளை விடுவிப்பதற்கான கள விஜயங்களை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டிய காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதவிர மன்னார் உள்ளிட்ட பகுதியிலும் காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.ஆர். ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

2021 ஆம் ஆண்டுவரை வருடாந்தம் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என அமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் கூறினார். (ஐ)

# முழு அடைப்புப் போராட்டத்துக்கு பல தரப்புக்களில் இருந்தும் ஆதரவு

### தமிழர் ஆசிரியர் சங்கம் முழு ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

வடக்கு, கிழக்குக் தழுவிய முழு அடைப்புக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

நாளை வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முழு அடைப்புக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்து சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் இயல்பு நிலையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. மாற்றங்கள் ஏற்படுவதற்காக பல்வேறு விட்டுக் கொடுப்புக்களையும், தியாகங்களையும் எமது இனம் சார்ந்த கட்சிகளும், மக்களும் செய்த பின்னரும் எதுவுமே நடைபெறவில்லை.

ஆயுதப் போராட்டம் அறவழிப் போராட்டமாக மாறி அனைத்துத் தரப்பினரும் வீதியில் நாள் கணக்காக, மாதக் கணக்காக போராடும் நிலை உருவாகியுள்ளது. எதையும் யாரும் கண்டுகொள்வதாக இல்லை.

இத்தகைய நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து முன்னெடுக்கும் இத்தகைய அறவழிப் போராட்டம் வெற்றியளிக்க வேண்டும்.

அதற்காக வடக்கு, கிழக்கில் வாழும் அனைத்து மக்களும் விசேடமாக கல்விப் புலம் சார்ந்த அனைவரும் ஒன்று சேர்ந்து வியாழக்கிழமை நடைபெறும் முழு அடைப்புக்கு பூரண ஆதரவை வழங்குவதோடு இது போன்ற முனைப்புக்களைத் தொடர்ந்தும் எடுக்கவேண்டும்.- என்றுள்ளது.

# வீணாகான குருமார்பீடம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26

காணாமற் போனவர்களது உறவினர்களால் நாளை வியாழக்கிழமை நடத்த ஏற்பாடாகியுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்குத் தமிழ் பேசும் வடக்கு, கிழக்கு தாயக மக்கள் அனைவரும் தமது மேலான ஆதரவை வழங்க வேண்டும் என்று வீணாகான குருமார் பீடம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வீணாகான குருமார் பீடத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசின் கவனிப்பு அற்று நீண்ட நாள்களாகப் போராடிக்கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க நடத்தப்படும் இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்துத் தரப்பினரும் கருத்து முரண்பாடுகள் அற்றவகையில் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்துக் குருமார்களும் ஆலய சமூகத்தினரும் ஆன்மீக வலுச்சேர்க்க தமது ஒத்துழைப்புக்களை வழங்கும் முகமாக அன்றைய தினம் இறை சந்நிதானங்களில் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் வேண்டுகின்றோம்.

ஒரு சாராராகிய நாம் ஒருபுறம் சந்தோஷத்தையும் கொண்டாட்டங்களையும் நடத்திவரும் வேளையில் மறுபுறம் எமது சாகோதர உறவுகள் யுத்தம் நிறைவடைந்த பிற்பாடும் தொடர்ந்தும் அநாதைகளாக அமைதியின்றி மகிழ்ச்சியின்றி தமது துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி கிடைக்காதா என்ற ஏக்கத்துடன் அவலவாழ்வாக நீண்ட பல நாள்களாக தெருக்களில் தமது வாழ்வை நடத்திக் கொண்டு இருக் கின்றார்கள்.

இவர்களது துன்பங்கள் விடுபட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும். சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும். அரசு உடனடியாக இவர்களது கோரிக்கைகளைச் செவி சாய்த்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மக்களது சாத்வீகமான போராட்டத்துக்கு இறையருளுடன் இந்துக் குருமார்களும் ஆலய சமூகத்தினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்ப்போம்.- என்றுள்ளது. (ஐ)

# இலங்கையில் மலேரியா அபாயம்!

இலங்கையில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் உள்ளது என்று மலேரியா நோய் தடுப்புப்பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் மலேரியா முழுமையாக இல்லாது ஒழிக்கப்பட்டுள்ள போதும், வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருபவர்களால் அந்த நோய் பரவும் அச்சுறுத்தல் உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுகாதார மருத்துவ காரியாலயம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்த சுகாதார மருத்துவ காரியாலயம் ஊடாக, இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களை சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மலேரியா நோய் தடுப்புப்பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)





# காணிப் பிணக்குகள் தீர்க்க கரைச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஏப்.26

கரைச்சி பிரதேசத்துக்கு உட்பட்ட காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

'நிலமெகவர' ஜனாதிபதியின் மக்கள் சேவையின் தேசிய திட்டத்துக்கு அமைவாக காணி அமைச்சும், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களமும் இணைந்து நேற்றுமுன்தினம் இந்த நடமாடும் சேவையை நடத்தின.

இந்த நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரிவுகளுக்கும் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### மீதொட்டமுல்லவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# மூன்று மாதக் கொடுப்பனவை ஒன்றாக வழங்க பணிப்புரை

மீதொட்டமுல்ல அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக மூன்று மாதங்களுக்காக வழங்கப்படவிருந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுத் தொகையை ஒரே தடவையில் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பகுதிகளில் குப்பை கொட்டப்படுவது தொடர்பான சந்திப்பொன்று ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்றபோதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்த அனர்த்தத்தில் 98 வீடுகளே சேதமடைந்தன. அந்த வீடுகளில் வசித்த குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 50ஆயிரம் ரூபாஅடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டை வழங்குவதாக அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில், அந்தத் தொகையை ஒரே தடவையில் வழங்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார். (ஐ)

# புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிசக் கட்சி ஆதரவு

யாழ்ப்பாணம்.ஏப்.26

மக்களது போராட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள கடையடைப்பு எதிர்ப்புப் போராட்டத்துக்கு எமது கட்சி பூரண ஆதரவைத்தெரிவித்துக்கொள்கின்றது.

-இவ்வாறு புதிய ஜனநாயகக் மாக்சிஸ லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

போரின்போது காணாமற் போகச் செய்யப்பட்டோருக்கான பதில் வேண்டியும், சிறைகளில் இருந்து வரும் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும், படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க வற்புறுத்தியும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் இரவு பகலாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தப் போராட்டங்களின் நியாயத்தை ஏற்று ஆரம்பம் முதலே எமது கட்சி அவற்றை ஆதரித்தும் பங்குபற்றியும் வந்துள்ளது.

ஆரம்பம் முதலே வடக்கு, கிழக்கு மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த வெகுஜனப் போராட்டங்களை மைத்திரி- ரணில் அரசு கண்டு கொள்ளாமலும் உதாசீனம் செய்தும் வந்துள்ளது.

அதே போன்று சில தமிழ்த் தரப்பினரும் அலட்சியம் காட்டி வந்ததுடன் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கும் மறைமுக வழிகளில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டங்களைத் தத்தமது அரசியல் உள்நோக்க நிகழ்ச்சி நிரல்களுக்கு உள்நாட்டினதும் புலம் பெயர்ந்த நாடுகளினதும் சக்திகள் பயன்படுத்துவதைப் போராடி வரும் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதும் அவசியமாகும். அதேவேளை, அனைத்துக் கட்சிகளும் அமைப்புக்களும் தத்தமது நிலைப்பாடுகளைப் போராடும் மக்கள் மீது திணிக்காது பொது நிலைப்பாட்டுடன் முன்வைக்கப்பட்டுவரும் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க ஆதரவு வழங்க வேண்டும்.- என்றுள்ளது. (ஐ)



ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபன் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று மாலை பொன்னாலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றன. பண்டிதர் கடம்பேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஊடகவியலாளர்கள், பொன்னாலை கிராம மக்கள், அமரர் ரூபன் குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அமரர் ரூபன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களுக்கான வெற்றிக் கேடயங்களும் நிகழ்வில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

### இந்திய உதவியைப் பெற்று

# பிராந்திய விமான நிலையமாக பலாலியை மேம்படுத்துங்கள்!

### சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்துகின்றார்

(எஸ்.நிதர்ஷன்)

பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய நிலையமாகத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு :-

பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாக மாற்றுவதாக இந்தியா கூறியிருந்தது. இதில் தற்போதுள்ள விமான நிலையக் காணியிலேயே மேலதிகமாக ஓர் அங்குல நிலம் கூட எடுக்காமல் இதனை விஸ்தரித்துத் தருவதாக இந்தியா கூறியிருந்தது. எனினும், இதனை முன்னைய அரசாங்கம் மறுதலித்திருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போதைய இலங்கை அரசாங்கம் இந்த விமான நிலைய விஸ்தரிப்புத் தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அத்துடன், இந்திய அரசாங்கமும் இத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு இந்த விமான நிலையத்தைச் செய்வதனூடாக வேலைவாய்ப்புப் பிரச்சினையைத் தீர்க்க கூடியதாக இருப்பதுடன் வடக்கிற்கான அபிவிருத்தியையும் விரைந்து மேம்படுத்த முடியும்.

எனவே, பலாலி விமான நிலையத்தைச் சிவில் பிராந்திய விமான நிலையமாக மாற்றுகின்ற வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். - என்றார் அவர். (உ)

## மே தினத்துக்கு 5000 பஸ்கள் தேவையாம்

கொழும்பு,ஏப்.26

மேதினக்கூட்டங்களுக்கு மக்களைப் போக்குவரத்து செய்ய அனைத்து அரசியல் கட்சிகளும் இலங்கை போக்குவரத்துச் சபையிடம் பஸ்களைக் கோரியுள்ளன எனப் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

பஸ்களுக்கான கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் அனைத்துக் கட்சிகளுக்கும் பஸ்கள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேதினக் கூட்டங்களுக்காக சுமார் 5,000 பஸ்களை அரசியல் கட்சிகள் கோரியுள்ளன என இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் ரமல் சிறிவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

எனினும் 4,000 பஸ்களையே இந்தத் தேவைகளுக்காக ஒதுக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழர் இருவர் ஈரானில் சுட்டுக்கொலை!

சட்டவிரோதமான முறையில் லண்டன் செல்ல முற்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் ஈரான் நாட்டில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில்–செம்மலை மற்றும் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். லண்டனில் தொழில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உள்ளூர் முகவர் ஒருவரின் ஊடாகக் குறித்த இருவரும் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு–உப்புக்குளத்தில் 39 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான பேரம்பலம் மைதிலிபாலன் (முன்னாள் போராளி) மற்றும் முல்லைத்தீவு செம்மலையைச் சேர்ந்த 23 வயதான விஜயகுமார் பிரசாத் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி லண்டன் நோக்கி இந்த இரு இளைஞர்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். பின்னர் அதே மாதம் 19 ஆம் திகதி குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளனர்.

தாங்கள் ஈரான் நாட்டில் இருக்கின்றனர் எனவும், அங்கிருந்து வேறு நாட்டிற்கு செல்லவுள்ளனர் எனவும் அவர்கள் தங்களுக்குத் தகவல் வழங்கினர் எனக் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், 19ஆம் திகதிக்குப் பின்னர் தங்களுடன் எவ்வித தொடர்பும் கொள்ளவில்லை எனக் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வெளிநாட்டுத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு குடும்பத்தினர் விவரமறிந்துள்ளனர்.

இதன்போது ஈரான் எல்லையைக் கடக்க முற்பட்ட இரண்டு இளைஞர்கள் சுடப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து, அவர்களின் படங்களைக் காண்பித்துள்ளனர். அந்தப் படம் சரியாக அடையாளம் காட்டக்கூடிய வகையில் இருக்கவில்லை.

இதனையடுத்து, வீட்டில் உள்ள குறித்த இருவரின் படங்களையும் வைத்து ஒப்பிட்டு பார்த்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்கள் மேற்படி இரு இளைஞர்கள் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## கீரிமலையில் வயோதிபரின் சடலம்

காங்கேசன்துறை, ஏப். 26

கீரிமலைக் கடற்பகுதியில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாகக் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த செல்லையா மனோகரன் (வயது - 81) எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அப்பகுதியில் சடலம் கிடப்பது தொடர்பாகப் பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளைத் தாங்கள் முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவித்தனர். (உ-44)



மலேசியாவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிமின் மகளும் அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினருமான நூர் இஸ்ஸா அன்வர் அம்மையார் நேற்று கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொடிகாமம் வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ்கள்

கிளிநொச்சி–தர்மபுரம் வைத்தியசாலைக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் புதிய நோயாளர் காவு வண்டி (அம்புலன்ஸ்) வழங்கி வைக்கப்பட்டது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் புதிய நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, முல்லைத்தீவு - மூங்கிலாறு வைத்தியசாலைக்கும், யாழ். கொடிகாமம் வைத்தியசாலைக்கும் நோயாளர் காவு வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு சுகாதார அமைச்சில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அமைச்சின் செயலாளர் ஆகியோர் இதனை வழங்கி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி–தர்மபுரம் வைத்தியசாலைக்கான நோயாளர் காவு வண்டியை கிளிநொச்சிப் பிராந்தியப் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ம.ஜெயராசா பொறுப்பேற்றுக்கொண்டார். (உ-70)

## படைகளுக்கு...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் காணிகளை விடுவிப்பதற்கான பொறுப்பைத் தட்டிக்கழித்து, அதனை இராணுவத்தின் பொறுப்பாகக் காட்ட முயற்சித்திருப்பதும், பாதிக்கப்பட்ட மக்களை, இராணுவத்தினருடன் பேச்சு நடத்த நிர்ப்பந்திப்பதும் எமது பிரச்சினையின் பரிமாணத்தை மேலும் தரமிறக்கியிருக்கிறது.

இராணுவத்தை தமிழர் தாயகத்தின் பொதுக் காணிகளில் நிரந்தரமாகக் குடியமர்த்தும் செயலுக்குச் சம்மதித்தாலே, வன்முறை மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட தமது சொந்தக் காணிகளை மீளப்பெறமுடியும் எனும் மிகக் கேவலமான பேரத்துக்கு தமிழ் மக்களை இலங்கை அரசு தள்ளியுள்ளது.

### கேவலமான பேரம்

காணி தொடர்பான மக்களின் உணர்வுகளைப் பேரத்துக்குள்ளாக்கி, தமிழர் தாயகத்தில் இராணுவத்தின் நிரந்தர இருப்பை உறுதிசெய்ய, அதுவும் எமது மக்களின் மீள்குடியேற்றத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத்திலேயே, ஆக்கிரமிப்பு இராணுவத்தைக் குடியமர்த்துவதற்கான அடிப்படைவசதிகளைச் செய்வது என்பது அர்த்தமுள்ள இராணுவமயநீக்கல் எனும் கோரிக்கையை அர்த்தமற்றதாக்கிறது.

### தொடரும் அச்சுறுத்தல்

தனியார் காணிகளில் இருந்து விலகிய இராணுவம் தமிழர் தாயகத்தின் பொதுக் காணிகளில் நிரந்தரமாகக் குடியமர்வது என்பது, எமது மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளேயே வைத்திருக்கும்.

எனவே, தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் அம்மக்களிடமேயே விரைவில் மீளளிக்கப்பட்டு, இராணுவமயமாக்கல் நீக்கப்பட்டு, உண்மையான சிவில்வெளி வழங்கப்பட வேண்டும் எனத் தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்துகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட தம் உறவுகளுக்காகவும், ஆக்கிரமிக்கப்பட்ட தம் நிலங்களுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேறும்வரை, அம்மக்களுக்கு இடைக்கால நிவாரணமாக வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவேண்டும் எனும் கோரிக்கையையும் நாம் அரசிடமும், சர்வதேச நாடுகளிடமும், புலம்பெயர்ந்த எம் மக்களிடமும் முன்வைக்கின்றோம்.

### ஒட்டுமொத்தக் குரல்

இப்போராட்டங்கள் அனைத்தும் தனித்தனிப் பிரச்சினைகளுக்கான பிரத்தியேகக் குரல்களாகக் கருதப்பட முடியாதவை. எம்மீதான அடக்குமுறைகளின் விளைவுகளுக்கெதிரான ஒட்டுமொத்தக்குரலாகவே இவற்றை நாம் கருதவேண்டும்.

எனவே, தமிழர் தாயகமெங்கும் இந்தப் போராட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒருமித்த குரலாக ஒலிப்பதுவே எம் கோரிக்கைகளின் வலுவை அதிகரித்து எமக்குச் சாதகமான விளைவுகளையும் விரைவுபடுத்தும்.

எனவே, இனிவரும் காலங்களில் இந்த மக்களின் போராட்டக் குரல்கள் வடக்கு, கிழக்குத் தழுவியதாக ஒருங்கிணைக்கப்பட்டுப் பலம்மிக்க ஒரு குரலாகப் பரிணமிக்க வேண்டும் என நாம் வேண்டுகிறோம்.- என்றுள்ளது. (உ)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


# தீர்க்கதரிசி தந்தை செல்வா!

ஈழத்துக் காந்தி - சத்திய சாதகர் - தந்தை செல்வநாயகத்தின் நாற்பதாவது நினைவு தினம் இன்றாகும்.

இலங்கை தேசத்தின் மதிப்பார்ந்த ஜனநாயகப் போராளி - அஹிம்சாவாதி - அறநெறித்தீரர் - சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகம் இலங்கைத் தமிழர்களின் பிதாவாக மதிக்கப்படுபவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிதாமகரும் அவரே. மிக நேர்மையான அரசியல்வாதி என சிங்களத் தலைவர்களாலும் - அரசியல் எதிரிகளாலும் - கூட மதிக்கப்பட்ட மாமனிதர் தந்தை செல்வா.

நலிந்த உடல், அமைதியான சுபாவம், மெல்லிய கீச்சுக்குரல் - யாவரையும் மதிக்கும் பண்பியல்பு - இவை அவரின் தோற்றப் பொலிவு. ஆனால், அந்த மென்மையான மனிதருக்குள் விடாப்பிடியான - உறுதியான - திடமான - கொள்கைப் பற்றும், நேர்மையும், சிந்தனைத் தெளிவும், தீர்க்கதரிசனமும் எப்போதும் இருந்தன.

"சுதந்திர இலங்கையின் சோல்பரி அரசமைப்பின் கீழான ஒற்றையாட்சி தமிழர்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். பல்லின, பல்மத, பல் மொழி பேசும் மக்களைக் கொண்ட இலங்கைத் தீவுக்கு அந்த மக்கள் கூட்டத்துக்குப் பொருத்தமான அரசமைப்பு ஒன்று வேண்டும்." - என்று 1949 இல்அடித்துக் கூறியவர் அவரே.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றுவாயின் போது அவர் கூறிய மேற்படிக் கருத்தின் தேடல்தான் இன்றும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியாக நடந்து கொண்டிருக்கின்றது.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டுக்கு எது தேவை - எது அத்தியாவசியம் - எது தவிர்க்க முடியாதது - என்று அவர் கூறினாரோ, அதை நாம் இப்போதும் தேடிக் கொண்டிருக்கின்றோம். அதனால்தான் அவரை அரசியல் தீர்க்கதரிசி என எல்லோரும் மெச்சுகின்றார்கள்.

சுயாட்சி முறைமையே தமிழருக்கு அவசியம் என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உருவாக்க காலத்திலிருந்தே அவர் வலியுறுத்தி வந்தார். அதற்காக அவர் பிரிவினையை ஆரம்பத்தில் கோரவேயில்லை.

'சுயாட்சி', 'கூட்டாட்சி' இந்த இரண்டுக்கும் வழி செய்யும் விதத்தில் மிகப் பொருத்தமான முறையாக சமஷ்டி யோசனையை எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் அவர் முன்வைத்தார்.

சமஷ்டி முறையை பிரேரித்த அவர், அதற்காகக் காத்திரமான வழியிலேயே பல்வேறு போராட்டங்களையும் நடத்தினார்.

வடக்கு, கிழக்கு எங்கும் - தமிழர் தாயகப் பிரதேசம் முழுவதிலும் - பரந்து வாழ்ந்த தமிழ் பேசும் மக்களை ஒரு தேசக் கட்டமைவாக ஒன்றிணைக்கும் அற்புதத்தை, தமது ஆளுமைப் பண்பினால் அவர் சாதித்துக் காட்டினார்.

பதவிச் சுகத்துக்காகவும், சலுகைகளுக்காகவும் எச்சமயத்திலும் விலை போகாத அரசியல் நேர்மையாளர் தந்தை செல்வா.

இந்த இலங்கைத் தீவில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் தங்கள் தனித்துவத்தையும், கௌரவ வாழ்வையும், தமது தேசக் கட்டுமானத்தையும் காத்துக் கொள்வதற்கு சாத்தியமான அனைத்து வழியிலும் நேர்மையான போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தளராமல் தலைமைத்துவம் வழங்கி வழிகாட்டியவர் அண்ணல் தந்தை செல்வா.

இந்த இலங்கைத் தீவில் தனித்துவ தேசிய இனமான தமிழ் பேசும் மக்களின் பிரிக்க முடியாத அரசியல் சுயநிர்ணய உரிமையை 1951 இல், தமது தலைமையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டிலேயே முழங்க வைத்த தூரதிருஷ்டியாளர் தந்தை செல்வாவே.

உரிமைகளைப் பெறும் கோரிக்கைகளை மட்டும் அவர் முன்வைக்கவில்லை. அவற்றை அடைவதற்கு சாத்தியமான - யதார்த்தமான - நீதிமுறையின்படி அமைந்த - தார்மீக அடிப்படையில் மதிக்கப்படுகின்ற - போராட்ட நடைமுறைகளையும் துணிச்சலுடன் அவர் முன்னெடுத்தார்.

1956 ஜூன் 5 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றுக்கு முன் - காலி முகத்திடலில் - அவரின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகமும், 1960 களில் அவரின் வழிகாட்டுதலில் முகிழ்ந்த - அறவயப்பட்ட - காந்தீய நெறிமுறையிலான - அஹிம்சை வழியிலான - குந்து மறியல் போராட்டம் தமிழ் பேசும் மக்களை ஒரு தேசமாகத் தலைநிமிர வைத்தது என்றால் அது மிகையன்று.

தந்தை செல்வா அன்று பிரயோகித்த அரசியல் தந்திரோபாய உத்திகளையே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் பின்பற்றுகின்றது என்பதும் கூடக் கவனிக்கத்தக்கது.

தமது சமஷ்டிக் கோரிக்கையை எட்டுவதற்கு - தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு - பல்வேறு அரசியல் உத்திகளை ஜனநாயக இடைவெளிக்குள் தந்தை முன்னெடுத்துப் பார்த்தார்.

அரசுகளை ஆக்குவது, அவற்றுடன் இணைந்து பணியாற்றுவது, அரசுகளை வீழ்த்துவது என்று அவரது அரசியல் சாணக்கியம் பல திறன் வாய்ந்தது. அதனைத்தான் சம்பந்தன் தலைமையான கூட்டமைப்பும் இன்று செய்கின்றது எனலாம்.

நீதியான முறையில், உரிமை வேண்டி தமிழர்களுக்காகத் தாம் நடத்திய தர்மப் போராட்டங்கள், தென்னிலங்கை அரசினால் அநீதியான முறைகளில் முறியடிக்கப்பட்ட போது தந்தை செல்வா வேதனையுடன் ஒரு விடயத்தைக் கூறினார்.

"அஹிம்சை வழியில் போராடும் தமிழர்களுக்கு நியாயமாக தீர்வை - அரசியல் விடுதலையை - தருவதற்கு சிங்கள அரசுகள் மறுக்குமானால், எமக்கு அடுத்த இளைய சந்ததியினர் ஆயுதம் கொண்டு அதை மீட்டெடுக்க முயலும் நிலைமை ஏற்படும்." - என்றார் அவர்.

அவரின் தீர்க்கதரிசனமே இறுதியில் நடந்தது. அந்த ஆலோசனையை தென்னிலங்கை ஏற்க மறுத்ததால் யுத்தம் என்ற பெயரில் சொல்லொணாப் பேரழிவுகளை இலங்கை சந்திக்க நேர்ந்தது.

# தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் புதிய சட்டமூலம்!

## விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் கிரியெல்ல



தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் தர நிர்ணயம் குறித்து புதிய சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்குப் பின்னணியில் சில தீய சக்திகள் செயற்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளில் 9 வருடங்களுக்கு மேல் கல்விகற்று வருபவர்களே ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கையில் போதியளவு சட்டம் இல்லை.

மேலும், உயர்கல்வியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இலங்கையில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பண வசதி படைத்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வியைத் தொடர்கின்றனர். ஏனைய மாணவர்கள் கல்வியை இடையில் கைவிடுகின்றனர்.

இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்ற நிலையில், இதனைத் தீர்ப்பதற்குத் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுகின்றமை அவசியமாகின்றது.- என்றார்.

# பராமரிப்பு செலவினம் அதிகரிப்பு; ஒலுவில் துறைமுகம் மூடும் நிலை

## கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

அம்பாறை- ஒலுவில் துறைமுகத்தில் பராமரிப்புச் செலவுகள் அதிகரித்து வருகின்றமையால் அதனை மூடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்தத் துறைமுகத்தின் செலவீனங்களைக் குறைப்பதற்குப் போதியளவு நிதியுதவி கிடைக்கப்பெறாமையின் காரணமாக, அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் துறைமுகத்தை அமைப்பதற்கு முன்னர் சரியான முறையில் சுற்றுச் சூழல் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவில்லை.

குறிப்பாக 250 இற்கும் மேற்பட்ட படகுகளை இந்தத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், படகுகள் ஆபத்தான நிலையில் துறைமுகங்களுக்கு வெளியிலேயே நங்கூரமிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஒலுவில் துறைமுகத்தின் பராமரிப்புச் செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், ஒலுவில் துறைமுகத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. -என்றார்.

(எ)

# மாணவரின் சுகாதார நிலைமை கருதி வரணி பாடசாலையில் சிரமதானம்

## பெற்றோர், நலன்விரும்பிகள் முன்மாதிரி

வரணி, ஏப். 26

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் பொது மக்கள், மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர்.

பாடசாலை இன்று இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும் நிலையில், மாணவர்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும் சுற்றுச்சூழலைப்பேணும் நோக்குடனும் இந்த சிரமதானப் பணியை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, இந்தப் பாடசாலை அதிபர் வை. விஜயகுமாரன் கடந்த ஜனவரியில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், மீண்டும் இதே பாடசாலைக்கு அதிபராக நியமனம்பெற்றுவந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-25)

# கிராமசேவையாளர் பதவிக்கு 2 ஆயிரம் வெற்றிடங்கள்!

கொழும்பு, ஏப்.26

கிராம சேவையாளர்களுக்கு 2 ஆயிரம் பதவி வெற்றிடங்கள் நிலவுவதாக அரச முகாமைத்துவ மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிராம சேவையாளர்களுக்கான போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானமையின் பின்னர், அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று அமைச்சர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வெற்றிடங்கள் நிலவும் பகுதிகளுக்கு குத்தகை ரீதியில் கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விரைவில் நாடளாவிய ரீதியில் காணப்படும் கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்களுக்கு சிறந்த நபர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ)

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மே முதல்வாரத்தில் வேலைநிறுத்தம்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 8 தொழிற்சங்கங்கள் மே முதலாம் வாரத்தில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளன என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதி செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

'சைட்டம்' தனியார் வைத்திய கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

பணிப்பகிஷ்கரிப்புக்கு ஏனைய 8 தொழிற்சங்கங்கள் தற்போதுவரை ஆதரவு தெரிவித்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)





விபத்தற்ற பயணமே
விருப்பத்துக்குரிய பயணம்!

குறுக்கு வீதிக்கு திரும்பும் முன்னர், ஆகக் குறைந்தது 50m தூரத்துக்கு முன்னால், பக்க ஒளிச் சமிக்ஞையை ஒளிர விடுங்கள்

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## நாளை

27.04.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : பரணி மா. 6.25 வரை
திதி : பிரதமை பி.ப. 4.06 வரை

சுபநேரம் : 7.29 - 8.59 வரை
இராகுகாலம் : 1.29 - 2.59 வரை

# வவுனியா வடக்கு இராசபுரம் கிராமத்தை 'லைக்கா ஞானம்' கிராமமாக்க முடியாது!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

வவுனியா, ஏப்.26
வவுனியா வடக்கில் சின்னடம்பன், இராசபுரம் கிராமத்தில் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை குடியமர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட வீட்டுத் திட்ட பகுதி கிராமத்தின் பெயரை 'லைக்கா ஞானம்' கிராமம் என்று பெயர் மாற்றம் செய்ய முடியாது என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போது அங்கு வந்திருந்த அந்தப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் இராசபுரம் என்னும் தமிழ் மக்களின் பூர்வீக கிராமத்தின் பெயர் லைக்காஞானம் கிராமம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்களை மீள்குடியேற்றுவதற்காக வீட்டுத் திட்டம் வழங்குவது நல்ல விடயமாக இருக்கின்றபோதும் ஒரு பாரம்பரிய பழைமையான கிராமத்தின் பெயரான இராசபுரம் என்பதை மறைத்து லைக்கா ஞானம் கிராமம் என்று மாற்றுவது எமது வரலாற்றை மாற்றுவதாக அமைந்து விடும் என ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதன்போது பதிலளித்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புராதன கிராமங்களின் பெயர்கள் அந்தக் கிராமங்களின் அடையாளங்களாகவும், ஏதோவொரு வகையில் அந்தகிராமத்தவர்களுடன் தொடர்புபட்டதாகவும் அமைந்துள்ளன.

அந்த அடையாளங்களைநாம் மாற்ற முடியாது. அது தொடர்பில் உடனடியாக பிரதேச சபை கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதனை வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரும் வலியுறுத்தினர். இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானகே.கே.மஸ்தான் ஆதரவு வழங்கினார்.

இதனையடுத்து பதிலளித்த வவுனியா வடக்கு பிரதேச சபைச் செயலாளர் க.சத்தியசீலன், கிராமத்தின் பெயரை மாற்றி வீதிப் பலகைகள் நடப்பட்டுள்ளன. இது தொடர்பில் எம்மிடம் எந்தவித அனுமதியும்பெறப்படவில்லை. இந்த நிலையில், கூட்டத்தில் நீங்கள் ஏதாவதுமுடிவு எடுத்தால் அதனை நடைமுறைப்படுத்துவோம் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து அந்த கிராமத்தின் பெயரை மாற்ற முடியாது எனவும் அது இராசபுரம் கிராமம் என்றே தொடர்ந்தும் இருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. உடனடியாக புதிதாகப் பெயர்மாற்றி அமைக்கப்பட்ட வீதிப் பலகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.
(ஐ-100)

# வவுனியா பிரதேச அபிவிருத்திக் கூட்டத்துக்கு பொது அமைப்புக்களுக்கு அழைப்பில்லை






வவுனியா, ஏப்.26
வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களுக்கு அழைப்பில்லை.

வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

நீண்ட காலத்துக்குப் பின்னர்வவுனியாவடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே. மஸ்தான், சிவசக்தி ஆனந்தன் மற்றும் முதலமைச்சர் சார்பில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிராம மட்டத்தில் உள்ள அமைப்புக்கள், பொது அமைப்புக்களுக்கு தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட அனுமதி வழங்கப்படவில்லை. அதேவேளை, அவர்களுக்கு அழைப்பும் விடுக்கப்படவில்லை.

அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் மட்டும் கூடிக்கதைக்கும் கூட்டமாக அது அமைந்திருந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மீள்குடியேற்றப் பகுதிகளை அதிகம் கொண்ட இந்தப் பகுதி மக்கள் தமது பிரச்சினைகள் குறித்து கதைக்க முடியாதவிடத்து இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்எதற்குஎன்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஐ-100)

# ரயிலில் மோதி பெண் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப்.26
நாத்தாண்டியாவில் ரயிலில் மோதி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளத்திலிருந்து கொழும்புநோக்கிப் பயணித்த ரயிலிலேயே இவர் மோதுண்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் 40 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே பலியாகியுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. சடலம் மாரவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# உத்தேச அரசமைப்பால் சமூக இணக்கம் ஏற்படும்

## அரசமைப்பு சபையின் தலைவர் லால் விஜயநாயக்கா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.26
உத்தேச புதிய அரசமைப்பு மக்களுக்கும் அரசுக்கும் சமூக நிலைப்பாடுகளில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் அரசமைப்பாக அமையும் என்று அரசமைப்பு சபையின் தலைவர்சிரேஷ்ட சட்டத்தரணி லால் விஜயநாயக்கா தெரிவித்தார்.

இலங்கையின் அரசமைப்புச் சபை செயலகத்தின் ஏற்பாட்டில் புதிய அரசமைப்பைத் தயாரித்தல் தொடர்பாக அரச அதிகாரிகளின் ஊடாக பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டம் யாழ். மாவட்ட செயகத்தின் கேட்போர் கூடத்தில் இலங்கையின் அரசமைப்புச் சபை பொதுமக்களை அறிவூட்டும் ஒருங்கிணைப்பாளரின் செயலாளருமாகிய வின்ஸ்டன் பத்திராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த அரசமைப்பானது பல புரிந்துணர்வுகள், பொருளாதார ரீதியான கட்டமைப்புக்கள்மக்களுக்குரிய அதிகாரங்களின் தேவைப்பாடுகள், புதிய அரசியல் ரீதியாக எமது அரசின் கொள்கைத் திட்டங்கள் தொடர்பான அமைந்துள்ளது.

மக்களின் இறைமையில்அரசியல்அமைப்பின் ஊடாக வெவ்வேறு துறைகளுக்கு செயற்படுத்துவதற்காகவே அதற்கான அதிகாரத்தை இந்த அரசமைப்பு வழங்குகின்றது.

இதனை எமது நாட்டின் தமிழ், கிறிஸ்தவ, முஸ்லிம், சிங்களஇனமக்களின் அரசமைப்பாகக் காணமுடிந்துள்ளது. அதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்கவே இவ்வாறான அரசியல் ரீதியான நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்ட செயலக ரீதியாக ஆரம்பித்துள்ளோம்.-என்றார்.(ஐ)




*வன்னிப்பிராந்தியபிரதிப்பொலிஸ் மாஅதிபர் அலுவலக தமிழ், சிங்கள புதுவருட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.*

*நேற்றுக் காலை 6.30 மணியளவில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பமான 15 கிலோ மீற்றர் தூரத்துக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியை வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆரம்பித்து வைத்தார்.*

*அதனைத் தொடர்ந்து ஆண், பெண் இருபாலருக்குமான மரதன் ஓட்டப் போட்டியை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்சிசிரகுமார ஆரம்பித்து வைத்தார்.*

*முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம்பெற்று வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.*

*பொலிஸ் உத்தியோகத்தர்கள், பெண் பொலிஸார், வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்துக்கு உட்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ- 100)*

# கீத் நொயார் மீதான தாக்குதல்; முன்னாள் டி.ஐ.ஜியிடம் விசாரணை!

ஊடகவியலாளர் கீத் நொயார்மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மாஅதிபர்அனுர சேனாநாயக்கவிடம் விசாரணைநடத்தப்பட்டுள்ளது.

கீத் நொயாரைக் கடத்திச் சென்று மிகமோசமாகத் தாக்கியமை தொடர்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 22 ஆம் திகதி சிறைச்சாலையில் விசாரணை நடத்தியுள்ளனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் இந்தவிசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ரக்பிர்வீரர் வசீம் தாஜூடீன் கொலை தொடர்பிலான தகவல்களை மூடி மறைத்த குற்றச்சாட்டின் பேரில் அனுர சேனாநாயக்க கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கீத் நொயார் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த அனுமதிக்குமாறு நீதிமன்றிடம் அண்மையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோரியிருந்தது.

நீதிமன்றம் இதற்கான அனுமதியை அண்மையில்வழங்கியிருந்தது. இதன்படி அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து அனுர சேனநாயக்கவிடம் கடந்த 22ஆம் திகதி விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கீத் நொயார் கடத்தப்பட்ட போது அனுர சேனாநாயக்க, கொழும்பு குற்றப் புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்



# மாயக்கல்லி காணி ஆக்கிரமிப்பு விவகாரம்: விரைவில் ஜனாதிபதியின் கவனத்துக்கு!

## கிழக்கு முதலமைச்சர் உறுதி



பூர்வீக நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பு எமது எதிர்கால இருப்பையே கேள்விக்குட்படுத்தி உள்ளது. இறக்காமம் மாயக்கல்லி காணி ஆக்கிரமிப்பு விவகாரம் விரைவில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட உள்ளது.

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

இறக்காமத்தைச் சேர்ந்த அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் இணைந்து முதலமைச்சரிடம் இறக்காமம் மாயக்கல்லி மலை விவகாரம் தொடர்பில் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். இதன் போதே முதலமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக காணிகள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. காணிகள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுகின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது. இது நல்லாட்சி மீதான சிறுபான்மையினரின் நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கி உள்ளது.

முஸ்லிம்களின் பாரம்பரியக் காணிகள் மீதான அத்துமீறல்கள் நல்லாட்சிக்கு நம்பி வாக்களித்த முஸ்லிங்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாடு அபிவிருத்தியடைந்த நாடாக பரிணமிப்பதற்கான உரிய தருணம் இதுவாகும். இந்த பொன்னான காலத்தை பயன்படுத்த விடாமல் சில இனவாதிகள் திட்டமிட்ட வகையில் நாட்டைத் தொடர்ந்தும் பின்னோக்கிக் கொண்டு செல்லும் வகையில் முரண்பாடுகளை தோற்றுவிக்க முனைகின்றார்கள்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் எல்லா இனத்தினரும் தமது இடங்களில் சுதந்திரமாகவும், நிம்மதியா கவும் வாழ்வதற்கான உரிமை இருக்கிறது. அந்த உரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுமிடத்து அது தொடர்பில் நீதிமன்றத்தில் முறையிடுவதற்கான உரிமை அனைவருக்கும் இருக்கிறது.

நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ள நிலையில் மாயக்கல்லி மலையில் இவ்வாறு அத்துமீறுவது நீதித்துறையின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தி உள்ளது.- என்றார். (ச)









தெட்சண கைலாயம் என அழைக்கப்படும் திருகோணமலை அருள் மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமானின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கோணேசப் பெருமான் மாதுமை அம்பாளுடன் ரதத்தில் வலம் வருகின்றமையையும், பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுகின்றமையையும், கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (ச)

# கிழக்கு மாகாணசபையை முற்றுகையிட்டனர் 3 மாவட்டங்களையும் சேர்ந்த பட்டதாரிகள்!

திருகோணமலை,ஏப்.26

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

கிழக்கு மாகாணசபை அமர்வின் 76 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமையைக் கருத்திற் கொண்டே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின்போது பட்டதாரிகள் பிரதான வீதியை வழிமறித்து கூச்சலிட்டமையினால் திருகோணமலை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். எச்.எம்.ஹம்ஸா போராட்டத்தை அமைதியான முறையிலும் எவருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தாத வண்ணம் முன்னெடுக்குமாறு இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார். இந்நிலையில், மேற்படி உத்தரவின் பிரதியை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்த தென்னே ஞானானந்த தேரர் கிழித்துக் காலில் போட்டு மிதித்த செயலால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து, அந்தப் பகுதியில் பொலிஸார் அதிகமாகக் குவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தொழில் உரிமை கோரி கிழக்கு மாகாண பட்டதாரிகளால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இரண்டு மாதங்களைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)





## நியமனம் வழங்குவது அரசின் கடமையாகும்!

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு மாத்திரமன்றி, நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டியமை நல்லாட்சி அரசின் கடமை ஆகும் எனக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 76 ஆவது சபை அமர்வு பிரதி அவைத் தலைவர் இந்திரகுமார் பிரசன்னா தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

அதில் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் அவசரப் பிரேரணையை முன் வைத்தார். இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேலை வாய்ப்புக் கோரி கடந்த இரண்டரை மாதங்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நாங்கள் உள்ளோம். -என்றார். (ச)

## மண் அகழ்வை நிறுத்தக் கோரி ஏறாவூர்ப்பற்றில் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலக பிரிவில் நடைபெறும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்தக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் இலுப்பையடிச்சேனை கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், விவசாய அமைப்பு போன்றவற்றின் ஏற்பாட்டில் இலுப்பையடிச் சேனை பிரதான வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்:-

பதுளை ஏ 5 வீதியில் அமைந்துள்ள கொடுவாமடு தொடக்கம் புல்லுமலை வரை சட்டவிரோதமான முறையில் மண் அகழப்பட்டு வருகிறது. இதனால் விவசாய நிலங்கள் மண் அரிப்புக்கு உள்ளாகின்றன.

விவசாயத்துக்கு நீர் வழங்கும் கால்வாய்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. வெள்ள அபாயமும் ஏற்படுகிறது. இது தொடர்பாக பல தடவைகள் பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. -என்றனர். (ச)

# எரிபொருள் விநியோகம் நேற்று இரவிரவாக நடந்தது!

## இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிறுவனத்தின் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 26

எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிறுவனத்தின் தலைவர் மொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சகல ஊழியர்களும் உரிய முறையில் சேவைக்கு திரும்பியுள்ளனர். கொழும்பிலும், புறநகரங்களிலும் தற்சமயம் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

நேற்று இரவு எரிபொருளை ஏற்றிய ரயில் மட்டக்களப்பை சென்றடைந்தது. நாட்டின் சகல எரிபொருள் நிலையங்களுக்கும் நேற்று இரவிரவாக எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

நாட்டின் நாளாந்த பெற்றோல் மற்றும் டீசல் தேவை ஏழு லட்சம் லீற்றர்களாகும். இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6 மணிக்கு கொலன்னாவை - முத்துராஜவெல மத்திய நிலையங்களிலிருந்து நூற்றுக்கும் அதிகமான பௌஸர்கள் அனுப்பப்பட்டுள்ளன. காலி, மாத்தறை எரிபொருள் களஞ்சியங்களிலிருந்தும் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. அனுராதபுரம், நுவரெலியா பிரதேசங்களுக்கு ரயில் மூலம் எரிபொருள் அனுப்பப்பட்டுள்ளது.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திருமலை எண்ணெய் கிடங்கு ஒப்பந்தம்: இந்தியா செல்கிறார் வர்த்தக அமைச்சர்!



## எதிர்ப்பு வெளியிடுகிறார் அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஏப். 26

திருகோணமலைஎண்ணெய் குதங்களை இந்தியாவுடன் இணைந்து நிர்வகிப்பது குறித்து உடன்படிக்கையை இறுதி செய்வதற்காக இம்மாத இறுதியில் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்தியா செல்லவுள்ளார் என்றும் ஜே.வி.பி. தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயத்துக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு வெளியிடுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலை எண்ணெய் கிடங்குகளை இயக்கும் அரசின் நடவடிக்கைக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு வெளியிடுகிறது. நாட்டின் சொத்துக்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கும் வகையிலேயே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது.

நாட்டின் சொத்துக்களை பாதுகாக்காமல், அதனை விற்பனை செய்யவே அரசு முயற்சிக்கிறது.- என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படை அதிகாரி பலி!



கொழும்பு, ஏப். 26

இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொச்சியில் உள்ள இந்திய கடற்படைப் பயிற்சி மையத்தில் ஏப்ரல் 3ஆம் திகதி தொடக்கம் பயிற்சியை மேற்கொண்டு வந்த இலங்கைக் கடற்படை அதிகாரியான பெற்றி ஒவ்விசர் வீரசிங்க என்ற இளநிலை அதிகாரியே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இவர் உள்ளிட்ட கடற்படைப் பயிற்சியாளர்கள் எர்ணாகுளம் கால்வாயில் சுழியோடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

சுழியோடுவதற்காக இறங்கிய இலங்கைக் கடற்படை அதிகாரி மீளத் திரும்பாததை அடுத்து, உடனடியாக தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அப்போது நினைவிழந்த நிலையில் நீருக்கு அடியில் அவர் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டார்.

ஆபத்தான நிலையில் கடற்படை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மாலை 3 மணியளவில் உயிரிழந்தார் என்று இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைக் கடற்படைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் இந்தியக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் மோடி, சோனியாவை இன்று சந்திக்கிறார் ரணில்!



கொழும்பு, ஏப். 26

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று இந்தியா சென்றுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் அவர் புதுடில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

பிரதமருடன், அவரது துணைவி மைத்ரி விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, மலிக் சமரவிக்கிரம மற்றும் அதிகாரிகளும் புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ளனர்.

நேற்று மாலை புதுடில்லியை சென்றடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாஜ் பலஸ் விடுதியில் தங்கியுள்ளார்.

இன்று காலை தாஜ் பலஸ் விடுதியில் இலங்கைப் பிரதமரை, இந்தியாவின் மத்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்கரி, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

அதையடுத்து இன்று பிற்பகல் 1 மணியளவில் ஹைதராபாத் இல்லத்துக்குச் சென்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை பிரதமர் ரணில் சந்திக்கவுள்ளார்.

அத்துடன், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியையும் அன்றைய தினம் பிரதமர் ரணில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இன்றைய தினம் பிற்பகல் 4 மணியளவில், தாஜ் பலஸ் விடுதியில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து நாளை காலை 11.30 மணியளவில், இரண்டரை நாள் விஜயத்தை மேற்கொண்டு, ராஜஸ்தான் மாநிலம் உதய்பூருக்கு பிரதமர் ரணில் செல்லவுள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை வரை அவர் அங்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை பிற்பகல் புதுடில்லி திரும்பும் ரணில் விக்கிரமசிங்க, மாலை 6.45 மணியளவில் மீண்டும் கொழும்புக்கு புறப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வொஷிங்டன் மாநாட்டில் பங்கேற்கின்றனர் நிதி அமைச்சின் அதிகாரிகள் 125 பேர்?



கொழும்பு, ஏப். 26

அமெரிக்காவில் நடைபெறவுள்ள மாநாடு ஒன்றில் நிதி அமைச்சில் கடமையாற்றி வரும் 125 பேர் பங்கேற்க உள்ளனர்.

வொஷிங்டனில் நடைபெறவுள்ள பொருளாதார மாநாடு ஒன்றிலேயே இவ்வாறு நிதி அமைச்சின் 125 அதிகாரிகள் பங்கேற்கின்றனர் என நிதி அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னதாக இந்த மாநாட்டில் அமைச்சர் மற்றும் அமைச்சின் ஓர் அதிகாரி மட்டுமே இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளனர்.

எனினும், இம்முறை நிதி அமைச்சின் 125 அதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

இந்த விடயம் குறித்து நிதி அமைச்சர் விசாரணை நடத்த வேண்டுமென அரசாங்க உயர் அதிகாரியொருவர் கோரியுள்ளார். அரசாங்கமே இதற்கான சகல செலவுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

மூன்று நாள் மாநாட்டில் பங்கேற்கும் இந்த இலங்கை அதிகாரிகள் ஒரு வார காலம் அமெரிக்காவில் தங்கியிருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்க முடிவு செய்யவில்லை!

## ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 26

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடக்காத ஒன்றைப் பற்றி கற்பனையாகச் சிந்தித்து தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன. அரசாங்கத்தில் இணைந்திருந்தாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளில் எந்த மாற்றமும் இல்லை.

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு சுதந்திரக் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதுபற்றிய எந்த யோசனையும் அமைச்சரவையில் முன்வைக்கப்படவில்லை.-என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மீனவரின் படகில் வெடிப்பு: ஒருவர் சாவு;4 பேர் காயம்!

அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்குச்செல்லத் தயாராக இருந்த படகின் எரிபொருள் தாங்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். படகில் இருந்த மீனவர்கள் 4 பேர் காயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் 51 வயதான அம்பாந்தோட்டை - மரே வீதியைச் சேர்ந்த எம். ரவூப் என்று தெரிய வந்துள்ளது.

அவர் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இதனால் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர் தொடர்பில் ஆராய மீன்பிடி இராஜாங்க அமைச்சர் திலிப் வேத ஆராச்சி அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தினசரி ராசி பலன் 26.04.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 13 ஆம் நாள் அமாவாசைத்திதி மாலை 5.46 மணி வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம்: அசுவினி இரவு 7.19 மணி வரை. பின்னர் பரணி. மரணயோகம் இரவு 7.19 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகு காலம்: பகல் 12.08 மணிமுதல் 1.41 மணி வரை. சுபநேரம்: மாலை 4.27 மணிமுதல் 5.57 மணி வரை. இன்று அமாவாசை விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத அமாவாசை. பிறந்த நட்சத்திர வழிபாடு: அசுவினி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். மனத்தில் நினைத்த காரியம் நிறைவேறும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

**ரிஷபம்:** தீமையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். தொழிலில் பல இடையூறுகள், பிரச்சினைகள் உண்டாகும். மறைமுக எதிரிகளால் தொல்லைகள் உண்டாகும்.

**மிதுனம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். தூரத்துச் சொந்தங்கள் வந்து உறவாடுவார்கள். வியாபாரிகளுக்கு ஆடம்பரப் பொருள்களால் நல்ல ஆதாயம் கிட்டும்.

**கடகம்** : கவலையான நாள். தனவரவு குறையும். அதிகமான குடும்பச் செலவுகளால் கவலை உண்டாகும். பண விடயத்தில் மற்றவருக்குப் பிணையாகப் போவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்** : யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து புதிய ஆடை, ஆபரணங்கள் பரிசாகக் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**கன்னி:** அலைச்சல் மிகுந்த நாள். சில தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளைத் தேடி அலைவார்கள். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள்.

**துலாம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அதிக தூரப்பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் கருத்து வேறுபாடு ஏற்படச் சாத்தியம் உள்ளதால் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**விருச்சிகம்:** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பம் குதூகலமாய் இருக்கும். நண்பர்கள், உறவினர்களின் பக்கபலம் இருக்கும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும்.

**தனுசு:** நன்மையான நாள். பொருளாதாரம் திருப்தியைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக அமையும். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்கள் நல்ல முன்னேற்றத்தைத் தரும். வியாபாரம் பன்மடங்கு பெருகும்.

**மகரம்:** யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். அதிக முதலீடு உள்ள தொழில்களைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் ஏமாற்றம் ஏற்படும்.

**கும்பம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. தட்டுப்பாடின்றி பணம் வந்துசேரும். புதிய முயற்சி பயனுள்ளதாக அமையும்.

**மீனம்:** இனிமையான நாள். தனவரவு அதிகரிக்கும். தொழில் ரீதியான முன்னேற்றம் உண்டாகும். இதுவரை இருந்த நோய்கள் நீங்கி ஆரோக்கியமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2, 3, 4, அத்தம்,சித்திரை 1, 2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந்நாளில் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# கள்ளின் விலையை குறையுங்கள்!

## சமூக நல அமைச்சர் வேண்டுகோள்



கொழும்பு, ஏப்.26

சமூகத்திலுள்ள அதிகமானவர்கள் பயன்படுத்தும் கள் வகை மதுபானத்துக்கான கட்டணத்தைக் குறைக்குமாறு சமூக நல மற்றும் தொழில் துறை அமைச்சர் டபிள்யு. டி.ஜே. செனவிரத்ன அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட இணைப்பாளர்களுக்கான கூட்டத்திலேயே அமைச்சர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசுக்கு வருமானம் குறைந்தாலும், சமூகத்தில் அதிகமானோர் பயன்படுத்தும் இந்த கள் வகை மதுபானத்துக்கான விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ. விஜேதுங்க, மாகாண சபை உறுப்பினர் சிறிபால கிரியெல்ல ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# திறைசேரி முறிகள்; ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு!

கொழும்பு, ஏப்.26

திறைசேரி முறிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் காலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை 27 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் சுமதிபால உடுகமசூரிய குறிப்பிட்டார்.

இதற்கான ஆவணம் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட ஆணைக்குழுவின் செயலாளர், இதுவரை 14 பேரிடம் ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவுசெய்துள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

# கால்நடைத் திருட்டு வரணியில் அதிகரிப்பு

வரணி வடக்குப் பகுதியில் கால் நடைகள் திருட்டு அதிகரிப்பு என்றுமில்லாதவாறு நடைபெறுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். காலையில் மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்படும் கால்நடைகள் பின் காணாமல் போகின்றன. இதனால் பெரும்பாலான கால்நடைவளர்ப்போர் தமது கால்நடை பகலிலும் கட்டிப் பராமரித்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

வறுமை நிலையில் உள்ள கால்நடை வளர்ப்போர் கால்நடைகளுக்கு உணவு வகைகளை விலை கொடுத்தே வாங்க வேண்டிய நிலையில் உள்ளனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், கால்நடைகளை யார் பிடித்துச் செல்கின்றனர் எப்படி காணமல் போகின்றன என்று குழம்பிய நிலையில் மக்கள் உள்ளனர். அண்மையில் சிமிழ் கண்ணகைபுரம் பகுதியில் ஊனமுற்ற குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட இரு ஆடுகள் இரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன என்று வீட்டின் உரிமையாளர் கவலையுடன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் அந்தப் பகுதி கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை இரவுவேளை மிகவும் விழிப்புடன் காவல் காத்து வருகின்றனர். (எ-25)

# ஹெரோயின் கடத்தி வந்த பாகிஸ்தான் பிரஜை கைது!

கொழும்பு, ஏப்.26

டுபாயிலிருந்து ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திவந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


டுபாயில் இருந்து விமானத்தின் மூலம் இலங்கைக்கு வந்த 40 வயதுடைய பாகிஸ்தான் பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

708 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் தனது உள்ளாடைக்குள் மறைத்து வைத்துக் கொண்டுவரும் போதே நேற்று அதிகாலை 12.45 மணியளவில் விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி 70 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தொடரும் மாணிக்கக் கல் அகழ்வால் நோர்வூட்டில் தொற்றுநோய் அபாயம்!



அச்சம் தெரிவிக்கின்றனர் பிரதேச மக்கள்

நுவரெலியா, ஏப்.26


நோர்வூட் பகுதியில் தொடர்ச்சியாக மாணிக்கக்கல் அகழ்வால் ஏற்படும் குழிகளால், தொற்று நோய்களும், அடிப்படை பிரச்சினைகளும் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது என பிரதேச மக்கள் அச்சம் வெளி யிட்டுள்ளனர்.

நுவரெலியா - நோர்வூட் - எலிபடை தோட்ட மைதானத்துக்கு அருகில் ஈரநிலப் பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வதற்காகத் தோண்டப்பட்டுள்ள பெரிய குழிகளால் இயற்கை வளம் பாதிப்படைந்து வருகின்றது.

இந்த ஈர நிலப் பகுதியின் மேற்புரத்தில் சமீபகாலமாக குழாய் மூலம் குடிதண்ணீர் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. எனினும், இந்த சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வால் எதிர்காலத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடும் நிலவக் கூடிய வாய்ப்புள்ளது.

அந்தப் பகுதியில் மாணிக்கக் கல் அகழ்வதற்காகப் பெரிய நிலப்பரப்பில் குழிகள் ஏற்படுகின்றன. இதனால் அந்தப்பகுதியில் வளரும் இயற்கைத் தாவரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் மற்றும் வெளியிட பிரதேசவாசிகள் அந்தப் பகுதியில் மாணிக்கக்கல் அகழ்கின்றனர் என்றும், அதற்கு பலர் உடந்தையாக இருக்கின்றனர் என்றும் பாதிக்கப்பட்டுள்ள தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)



# தந்தை செல்வாவின் சரித்திரம் உணர்த்தி நிற்பது என்ன...?

தந்தை செல்வாவின் 40 ஆவது நினைவு தினம் இன்றாகும்

தீபச்செல்வன்

இன்று தந்தை செல்வாவின் நினைவுநாள். தந்தை செல்வா காலமாகி 40 வருடங்கள் ஆகிவிட்டன. 1977 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அன்று தந்தை செல்வா காலமானார். அவர் காலமாகி நான்கு தசாப்தங்கள் ஆகிவிட்டன.

தந்தை செல்வா என்று ஈழத் தமிழ் மக்களால் அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஓர் அரசியல்வாதி மாத்திரமல்லர். அவர் பிரசித்தமான ஒரு வழக்கறிஞரும் ஆவார். யாழ்ப்பாணம் தொல்புரத்தை பூர்வீகமாகக் கொண்ட செல்வநாயகத்தின் தந்தை ஓர் ஆசிரியராக இருந்து பின்னர் மலேசியாவுக்கு புலம்பெயர்ந்த காலத்தில் தந்தை செல்வா மலேஷியாவின் ஈப்போ நகரில் பிறந்தார்.

அகில இலங்கை காங்கிரஸ் கட்சி மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த தந்தை செல்வா, இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் அரசில் இணைவது, இந்திய வம்சாவளியினரின் குடியுரிமை பறித்தல் போன்ற காரணங்களால் அகில இலங்கை காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி இலங்கை தமிழரசுக் கட்சியை அமைத்தார். தந்தை செல்வா இலங்கையில் எழுந்த இனப்பிரச்சினைக்கு சுயாட்சி முறையைத் தீர்வாகக் கோரினார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஈழத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகள் பேரினவாத தரப்புக்களால் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்களின் தாயகத்தில் பலவந்த குடியேற்றங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன், தனிச் சிங்களச் சட்டம் போன்ற அணுகு முறைகள் தமிழ் மக்களை மிகவும் பாதித்தன. தமிழ் மக்கள் அரசியல் உரிமையற்றவர்களாக, அரசியல் அதிகாரம் இழந்தவர்களாக மாற்றப்பட்டனர். இந்தக் காலகட்டத்தில் தந்தை செல்வநாயகம் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தைத் தொடங்கினார். ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் உரிமைக்காக ஜனநாயக ரீதியாகத் தீவிரமாகக் குரல் கொடுத்தார்.

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான எதிர்ப்பைக் கண்டு அதனைச் சமாதானப்படுத்தும் விதமாக தந்தை செல்வநாயகத்துடன் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். அது பண்டா - செல்வா ஒப்பந்தம் எனப்படுகின்றது. இதனைத் தீவிர இனவாதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் பௌத்த பிக்குகளின் கடுமையான பேரினவாத எதிர்ப்பு காரணமாகக் கைவிடப்பட்டது. தந்தை செல்வாவின் தொடர் போராட்டத்தை அடுத்து டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்யப்பட்டது. தமிழர்களுடன் செய்யப்பட்ட எல்லா ஒப்பந்தங்களையும் சிங்களப் பேரினவாதிகள் கிழித்தெறிய வைத்தனர்.

ஆனாலும், தந்தை செல்வாவின் அறப்போராட்டங்கள் அன்றைய காலத்து சிங்களத் தலைவர்களை சுயாட்சிமுறையை அங்கீகரிக்கத் தூண்டின. குறிப்பாக பண்டாரநாயக்க இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையை ஏற்றுக்கொண்டார். அன்றைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று, ஆயுதப் போராட்டம் உருவாகியிருக்காது என்றும், தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தியிருக்க மாட்டார்கள் என்றும் பிரபாகரன் தோன்றியிருக்க மாட்டார் என்றும் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்.

அது மாத்திரமல்ல, சிங்கள மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால் தமிழ் மக்களின் உரிமையை அவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் இன்னொரு யுத்தத்தை தடுக்க இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகிறார்.

இலங்கையில் ஆள்பவர்கள் அல்லது தலைவர்கள் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை வாய்ப் பேச்சளவில் ஏற்றுக் கொண்டாலும் பேரினவாதிகளைக் கடந்து நடைமுறைப்படுத்தாதமையே வரலாறு. இதனால் இறுதியில் அவர்களும் பேரினவாதிகளாகின்றனர். இதனால் ஈழத் தமிழ் மக்கள் மேலும் மேலும் ஒடுக்கி அழிக்கப்பட்டார்கள்.

தந்தை செல்வா அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் தோல்வியில் முடிந்தமையை அடுத்து 1976 இல் அனைத்து தமிழ் கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் தனித் தமிழீழத் தீர்மானமான வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு வந்தன.

வடக்கு, கிழக்கு பாரம்பரிய தாயகத்தில் இறைமை கொண்ட தன்னாட்சி அரசு அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அடுத்த வருடத்தில் தந்தை செல்வா காலமானார். அவரது இழப்பு ஈழத் தமிழ் மக்களுக்கு பேரிழப்பு. அறப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில், தன்னுடைய அடுத்த தலைமுறை ஆயுதம் ஏந்திப் போராடும் என்று தந்தை செல்வா குறிப்பிட்டார்.

அதைப் போலவே அதற்குப் பின் வந்த காலத்தில் தமிழ் இளைஞர்கள் ஈழத் தமிழ் மக்களின் உரிமை வேண்டி ஆயுதம் ஏந்தினர். அதற்குப் பின் வந்த கால தமிழ் மிதவாத அரசியல் சூழலும் ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்தியது. தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றின் ஊடாக சர்வதேச கவனத்தை ஈர்த்து இலங்கை அரசுடன் ஓர் இராணுவ பலத்துடன் பேச்சு நடத்தியது. தமிழ் மக்களின் உரிமையை வழங்காமல் அந்த ஆயுதப் போராட்டத்தை எவ்வாறு அழிப்பது என்று இலங்கை அரசு தனது தீவிர செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்காக மாபெரும் இனப்படுகொலை ஒன்றை நிகழ்த்தி தமிழ் ஈழ இனம் மிகப் பெரும் காயத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் தந்தை செல்வாவின் நினைவுநாள் மிகவும் உண்மையாக உணரப்பட வேண்டிய, நினைவு கூரப்பட வேண்டிய நாளாகும். தந்தை செல்வா போன்ற தலைவர்களைப் புரிந்து கொள்வதன் ஊடாக அவர்களின் குரலுக்குச் செவி சாய்ப்பதன் ஊடாக வரலாற்றை வேறு விதமாக எழுதியிருக்கலாம் என்ற அனுபவத்தை இந்த நாள் உணர்த்துகிறது. தந்தை செல்வாவின் சரித்திரம் அதனை உணர்த்துகிறது.

*அறப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில், தன்னுடைய அடுத்த தலைமுறை ஆயுதம் ஏந்திப் போராடும் என்று தந்தை செல்வா குறிப்பிட்டார். அதைப் போலவே அதற்குப் பின் வந்த காலத்தில் தமிழ் இளைஞர்கள் ஈழத் தமிழ் மக்களின் உரிமை வேண்டி ஆயுதம் ஏந்தினர்.*

முள்ளிவாய்க்கால் பேரழிவு யுத்தம் முடிந்தபோது தமிழ் ஈழ மக்கள் இனப் பிரச்சினையின் ஆரம்பத்துக்கு வந்திருப்பதைப் போலிருந்தது. இலங்கையின் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் தந்தை செல்வா ஒப்பந்தங்களின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளப்படுகின்றமையைப்போல் ஒரு காலம் தென்படுகிறது. இப்போதும் வரலாற்றை நியாயமாக அணுகும் சூழல் நிலவுகிறது. தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியமையில் இருக்கும் நியாயத்தை ஏற்பதாக சொல்லும் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்கள் நியாயமாக கோரும் தீர்வை, அவர்களின் உரிமையை முன் வைப்பதுதான் உண்மையும் நீதியுமான அணுகுமுறையாகும்.

தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமை ஒன்றை வழங்கவேண்டும் என்பதும் அவர்களின் தாயகத்தில் ஒடுக்கு முறைகளை மேற்கொள்ளுவதைத் தவிர்ப்பதும் அவர்களை இனஅழிப்பு செய்வதை நிறுத்துவதும் எத்தகைய நெருக்கடிகளைக் கடந்தும் பல்வேறு வடிவங்களில் தொடரும் போராட்டங்களின் ஊடாக வலியுறுத்தப்படும்.

தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்றும் அவர்களின் அபிலாஷை என்ன என்றும் வடக்குக் கிழக்கில் ஈழத் தமிழ் மக்கள் பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

தந்தை செல்வாவின் இடையறாத போராட்டங்களும் அவரது மரணத்தின் பின்னரான நான்கு தசாப்த போராட்டமும் அதற்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளின் செயல்களும் தமிழ் மக்களுக்கு மிகவும் உறுதியான நிலையான தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துகின்றன. இதுபோன்ற மிதவாதக் காலம் ஒன்றில் உரிய வகையில் இனப்பிரச்சினையை தீர்க்காது விடத்து எத்தகை விளைவுகள் எதிர் காலத்தில் உருவாகும் என்பதற்கும் இந்தக் காலகட்டம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்க மறுப்பவர்கள் மீண்டும் அந்த வரலாற்றை வாழச் சபிக்கப்படுவார்கள் என்று சொல்வார்கள். சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரையில் சிறு துரும்பையும் எதிர்ப்பார்கள். அவர்கள் எல்லாக்காலகட்டங்களிலும் மிகவும் பெரும்பான்மையாக இருப்பார்கள். அவர்கள் தமிழீழத்தை அல்ல, பஞ்சாயத்து சபையை ஏற்படுத்தினாலும் அதனையும் எதிர்ப்பார்கள். ஈழத் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கக் கூடாது என்பதும் அவர்களை ஒடுக்கி அழிக்க வேண்டும் என்பதுமே அவர்களின் நோக்கம். அத்தகையவர்களின் விருப்பங்களுக்கும் ஆதிக்கங்களுக்கும் இடமளித்து ஒட்டு மொத்த சிங்கள சமூகத்தையும் பேரினவாதிகளின் தரப்பாக மாற்றக்கூடாது என்பதையும் தந்தை செல்வாவின் சரித்திரம் உணர்த்துகிறது.



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 160

பொன்.வேணு கிருஷ்ணா

''ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறி அமெரிக்க தூதர்கள் (ஐ.நா.) பாதுகாப்பு கவுன்சிலுக்கு பாடம்நடத்திக் கொண்டிருந்த நிகழ்வுகளை இது என் நினைவுக்குக் கொண்டுவருகிறது. நாம் இதை ஏற்கனவே பார்த்து விட்டோம்'' என்றார் புட்டின். அவர் மேலும் கூறினார்: ''இதே போன்ற ஆத்திரமூட்டல்களை டமாஸ்கஸின் தெற்குப் புறநகர்ப் பகுதிகள் உள்ளிட்ட சிரியாவின் மற்றப் பகுதிகளிலும் நடத்துவதற்குத் தயாரிப்பு செய்யப்பட்டு வருவதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றன, அங்கே அவர்கள் திரும்பவும் ஏதேனும் பொருள்களைப் பயன்படுத்தி விட்டு சிரிய அதிகாரிகள் மீது குற்றம் சாட்டுவதற்காய் தயாரிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள்.''

G7 பிரதிநிதிகளிடையே ஏற்பட்ட மோதல்களானவை ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையில் அபிவிருத்தி கண்டுவருகின்ற ஆழமான புறநிலை மோதல்கள் மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தில் போருக்கு அதிகரித்துச் செல்லும் எதிர்ப்பு ஆகியவற்றின் ஒரு மங்கலான மற்றும் சிதறலான பிரதிபலிப்பாகவே அமைந்திருக்கின்றன.

**ட்ரம்ப் நிர்வாகம், அமெரிக்கா ஐரோப்பா இரண்டு இடங்களிலும் வெறுப்பை சம்பாதித்து இருக்கிறது**

ட்ரம்ப் நிர்வாகம், அமெரிக்கா ஐரோப்பா இரண்டு இடங்களிலும் வெறுப்பைச் சம்பாதித்து இருக்கிறது, அவர் பதவியேற்ற பின்னர் அவர் மீதான அதிருப்தி ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினில் 80 சதவீதமாய் இருக்கிறது. ட்ரம்ப் போரை நோக்கித் திரும்பியிருப்பது இந்த அரசியல் மற்றும் வர்க்கப் பதற்றங்களை மிகப் பெரும் அளவில் கூர்மைப்படுத்தியிருக்கிறது. ஜேர்மனியில், சிரிய இலக்குகள் மீதான தாக்குதல்களுக்கு வெறும் 26 சதவீத ஆதரவே இருக்கிறது, பிரான்ஸில், ஜனாதிபதி வேட்பாளரான ஜோன்லுக் மெலோன்சோன் ட்ரம்ப்பின் ஏவுகணைத் தாக்குதலை விமர்சனம் செய்த பின்னர் அவருக்கான ஆதரவு துரிதமாக ஏற்றம் கண்டு வருகிறது.


மேலும், உச்சிமாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க முதலாளித்துவங்கள் இடையிலான ஒரு வர்த்தகப் போரின் ஆரம்பக் கட்டங்கள் கட்டவிழத் தொடங்கின. அமெரிக்காவுக்கான ஜேர்மன் கார் ஏற்றுமதிகளுக்கு கடுமையான சுங்க வரி விதிக்க ட்ரம்ப் அச்சுறுத்திய சற்று காலத்திற்குப் பின்னர், ஜேர்மன் உருக்குத் தயாரிப்பு நிறுவனமான Salzgitter, அமெரிக்காவின் வணிகத்துறை ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலி மற்றும் பெல்ஜிய உருக்கு ஏற்றுமதிக்கு விதித்திருக்கும் சுங்க வரிகளுக்கு நேற்று கண்டனம் தெரிவித்தது. ''எங்களது தயாரிப்புகளுக்கு வரிகள் விதிக்க எடுக்கப்பட்டுள்ள முடிவும் அதன் அளவும் எங்களால் புரிந்து கொள்ள முடியாதுள்ளது'' என்று நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

உலக மக்கள் தொகையினர் முதலாளித்துவ அமைப்பு முறையின் ஒரு பேரழிவுகரமான முறிவுக்கு முகம் கொடுத்துள்ளனர். முந்தைய நூற்றாண்டில் இரண்டு முறை உலகப் போர்களாய் வெடித்திருந்த, சந்தைகள் மற்றும் இலாபங்களுக்கான பங்கீட்டில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களுக்கு இடையிலான கடுமையான மோதலானது, மீண்டும் அதை நிகழ்த்திக் காட்ட அச்சுறுத்துகிறது.

**''போர் குறித்த சிந்தனைகள்''**

Sddeutsche Zeitung (SZ) இது விடயத்திலான தனது தலைமைக் கருத்தை செவ்வாய்க்கிழமையன்று ''போர் குறித்த சிந்தனைகள்'' என்ற அசாதாரண தலைப்பின் கீழ் வெளியிட்டது. இந்த முன்னணி ஜேர்மன் தினசரியானது அமெரிக்காவுடனான ஓர் இராணுவ மோதலுக்குத் தயாரிப்புச் செய்தாக வேண்டும் என்று ஏறக்குறைய அறிவிக்காத குறைதான்: ''வர்த்தகப் போரால் அச்சுறுத்தப்படும் ஒருவருக்குத் தற்காப்பு மூலோபாயம் அவசியமாகிறது... இதுவே உலகமயமாக்கலுக்குப் பிந்தைய சகாப்தத்தின் தர்க்கமாகும். ஜேர்மனி தனது மிக முக்கியமான கூட்டாளிக்கு எதிராய் தற்காத்துக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.''

SZ, ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளாக கூட்டாளிகளை தேடுமாறு ஆலோசனையளித்ததோடு, ஆத்திரமூட்டும் வகையில், அமெரிக்காவிற்குள்ளான பிளவுகளைச் சுரண்டிக் கொள்வதற்கும் ஆலோசனையளித்தது. அது எழுதியது: அமெரிக்க மாநிலங்கள் மத்தியிலும் கூட ஜேர்மனி கூட்டாளிகளைக் கண்



டறிய முடியும். தெற்கு கரோலினா, டென்னஸி மற்றும் அலபாமா ஆகிய மாநிலங்களில் BMW, Volkswagen மற்றும் Daimler ஆகிய நிறுவனங்கள் மிக முக்கியமான வேலைவாய்ப்பளிப்பவர்களாக உள்ளதை அம் மாநிலங்களின் ஆளுநர்களும் செனட்டர்களும் நன்கு அறிவார்கள்.

**இராணுவ ரீதியாக ரஷ்யாவுக்கு எதிராக வேறு உதவியற்ற நிலையில் அமெரிக்காவுடனான தனது உறவையே இன்னும் சார்ந்ததாய் இருக்கின்ற ஐரோப்பாவை விட்டு விலகி விடும் அச்சுறுத்தலை மேற்கொள்வதாக, அமெரிக்க அதிகாரிகள் மீது ஐரோப்பிய அதிகாரிகள் கிட்டத் தட்ட பகிரங்கமாகவே குற்றம்சாட்டி வருகின்றனர்.**

இராணுவ ரீதியாக ரஷ்யாவுக்கு எதிராக வேறு உதவியற்ற நிலையில் அமெரிக்காவுடனான தனது உறவையே இன்னும் சார்ந்ததாய் இருக்கின்ற ஐரோப்பாவை விட்டு விலகிவிடும் அச்சுறுத்தலை மேற்கொள்வதாக, அமெரிக்க அதிகாரிகள் மீது ஐரோப்பிய அதிகாரிகள் கிட்டத்தட்ட பகிரங்கமாகவே குற்றம்சாட்டி வருகின்றனர். அமெரிக்க வரிசெலுத்துவோர் உக்ரேன்-இங்கு 2014 இல் அமெரிக்காவும் ஜேர்மனியும் ஒரு ரஷ்ய ஆதரவு அரசாங்கத்தை ஒரு பாசிசத் தலைமையிலான சதியின் மூலம் கவிழ்த்தன- இது குறித்து ஏன் கவலைகொள்ள வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலரான றெக்ஸ் ரில்லர்சன் தன்னிடம் கேட்டதாய் எய்ரோ ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

அமெரிக்க அதிகாரிகள் ஐரோப்பிய பாதுகாப்புக் குறித்து நம்பகமான வகையில் உறுதியளிப்பதற்கு இனியும் தயாராக இல்லாத நிலையையே, இந்தக் கேள்வி சுட்டிக்காட்டுவதாக எய்ரோ வெளிப்படக் கண்டார். ''ஐரோப்பாவைப் பாதுகாப்பானதாக மற்றும் அரசியல்ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வலிமையானதாக வைத்திருப்பது அமெரிக்க வரியிறுப்பாளர்களின் நலன்கள் சம்பந்தப்பட்டதே'' என்று ரில்லர்சனுக்குத் தான் பதிலளித்ததாக எய்ரோ தெரிவித்தார். ''ஐரோப்பா மிகப் பலவீனமானதாக, பல சிறு பாகங்களாய் பிளவுபட்டதாக, மற்றும் வலிமையற்றதாக இருப்பதை நீங்கள் விரும்பப் போவதில்லை.''

ஐரோப்பாவின் பாதுகாப்புச் செலவினங்களில் பெரிய அதிகரிப்புகளுக்கும், ஜேர்மனியின் மீள்-இராணுவமயமாக்கத்திற்கும், பிரான்ஸில் கட்டாய இராணுவச் சேவை மறு அறிமுகம் செய்யப்படுவதற்கான அழைப்புகளுக்கும் உந்திக்கொண்டிருக்கின்ற சக்தி வாய்ந்த ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டிகள் மேற்பரப்புக்கு வந்து கொண்டிருக்கின்றன. ''500 மில்லியன் குடிமக்களைக் கொண்டிருக்கும் ஐரோப்பியர்களாகிய நாம், பக்கவாட்டில்






அமர்ந்து கொண்டு சர்வதேச அரசியல் கட்டவிழ்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மாறாக சர்வதேச அரங்கில் ஒரு நம்பிக்கையுடனான வீரராக நாம் உருவெடுத்தாக வேண்டும்'' என்று காப்ரியல் லூக்காவிற்கு கிளம்பும் முன்னதாக ஜேர்மன் தினசரியான Tagesspiegel இல் ஒரு கருத்து ரையில் எழுதியிருந்தார்.

காப்ரியலும் ஐரோப்பிய சக்திகளும் ட்ரம்ப்பின் வான் தாக்குதலை ஆதரித்து அசாத்தை தூக்கியெறிவதற்கு நெருக்குதல் அளிக்கும் போது, அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நண்பர்களாய் அதைச் செய்யவில்லை. மாறாக அவர்கள் தமது முறைக்காக காத்திருக்கிறார்கள், இப்போதைக்கு, அமெரிக்கா தலைமையிலான கூட்டணியின் மூலமாக தமது நலன்களை முன்னெடுத்த முயன்று கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில், உழைக்கும் மக்களின் நலன்களை விலையாகக் கொடுத்து நிதியாதாரம் அளிக்கப்படுகின்ற தங்கள் மீள்-இராணுவமயமாக்கல் வேலைத் திட்டங்கள், தமது சொந்த ஏகாதிபத்திய நலன்களை இன்னும் திறம்பட்ட வகையில் திட்டவட்டம் செய்வதற்கு தங்களை அனுமதிக்கின்ற வரையில், அமெரிக்காவுடனான தங்களது தீர்மானகரமான வலிமை தொடர்பான சோதனை வரப் போவதில்லை என்று அவர்கள் நம்புகின்றனர்.

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




127

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### *வன்னி மீட்புச் சமர்: ஓயாத அலைகள் III*

ஒரு வருடத்துக்கு மேலாகப் பெறப்பட்ட வேவுத் தரவுகளைப் பரிசீலித்துப் பார்த்தபொழுது, இந்தப் பெரும் இராணுவ வலயத்தின் விஸ்வரூபப் பரிமாணங்களைப் பிரபாகரனால் எடைபோட முடிந்தது. இந்த வலயத்தில் அமையப்பெற்ற இராணுவக்கட்டமைப்புகளின் பலத்தையும் பலவீனத்தையும், இறுக்கத்தையும் ஈடாட்டத்தையும், அவரால் கண்டறிய முடிந்தது. கிளிநொச்சிப் பிரதேசத்தை மீட்டதன் பின்பு, இந்த இராணுவ வலயம் மீது பெரிய வலிந்து தாக்கும் படை நடவடிக்கையைத் திட்டமிட்டார் பிரபாகரன். தாக்குதல் திட்டத்தைத் தயாரித்த அதேவேளை, புலிப் படையணிகளை அணி திரட்டி, கடும் பயிற்சிகள் கொடுத்து, இந்த வன்னிப் பெரும் சமருக்குத் தயார்படுத்தினார். தாக்குதல் நாளும் குறித்தாகியது.

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் நாள் அதிகாலை 12:30 மணியளவில் விடுதலைப் புலிகளின் போரணிகள் ஒட்டுசுட்டானில் முதற் களமுனையைத் திறந்தனர். இதுவரை விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றில் நிகழ்ந்திராத மாபெரும் சமரை, எல்லாச் சமர்களையும் மிஞ்சிய தாய்ச் சமரை, எமது இயக்கம் ஆரம்பித்தது. தளபதி கேணல் ஜெயத்தின் வழிநடத்தலில், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் மாலதி படையணியும் புயல் வேகத்தில் பாய்ந்து இராணுவத்தினரின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை உடைத்தெறிந்து உட்புகுந்தன. இரண்டாம் நிலைப் பாதுகாப்பு அரண்களையும் தகர்த்து முன்னேறிய எமது படையணிகள் கடுகெதியில் மினி முகாம்களைக் கைப்பற்றி பிரதான தளம் மீது மும்முரமான தாக்குதலைத் தொடுத்தன. விடுதலைப் புலிகளின் மின்னல் வேக நகர்வும், சாவுக்கும் அஞ்சாத துணிவும், படையணிகளின் ஒன்றிணைந்த தாக்குதல் வியூகமும் சிங்கள ஆயுதப் படைகளை திக்குமுக்காட வைத்தது. பதற்றமும் பீதியுமடைந்த படையினர் எதிர்த்துப் போராடத் திராணியற்றுத் திகைத்து நின்றனர். ஒட்டுசுட்டான் படைத்தளத்தின் கட்டளை மையம் நிலைகுலையப் படைகள் சிதறி ஓடின. தாக்குதல் தொடங்கிய சில மணிநேரங்களுக்குள் படைத்தளம் புலிகள் வசம் வீழ்ந்தது. இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் வெளிப்புறச் சிறு முகாம்கள் தாக்கியழிக்கப்பட்டன. காலை புலர்ந்த வேளை ஒட்டுசுட்டான் பட்டினமும்,



அதன் சுற்றுப் புறங்களும் விடுதலைப் புலிகளின்முழுமையானகட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஒட்டுசுட்டானில் நிலையெடுத்து அதன் பாதுகாப்பை உறுதிசெய்ததும், அன்று காலையேஇருபெரும்படையணிகளாகப் புலி வீரர்கள் நெடுங்கேணியை நோக்கியும் கரிப்பட்டமுறிப்பை நோக்கியும் முன்னேறிச் சென்றன.

இதற்கிடையில் ஜெயந்தன் படையணியும், சோதியா படையணியும் நவம்பர் மாதம் இரண்டாம் நாள் காலை நெடுங்கேணிப் படைத் தளம் மீது பெரிய எடுப்பிலான தாக்குதலைத் தொடுத்தன. அந்தப் படைத்தளத்தின் முன்னரங்க, உள்ளரங்க பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்தெறிந்து, மினி முகாம்களைத் தாக்கியழித்துப் புலிகள் நெடுங்கேணியின் பிரதான தளம் மீது பீரங்கி, மோட்டார் குண்டுகளைப் பொழிந்து உக்கிர தாக்குதலை நிகழ்த்தினர். புலிப் பாய்ச்சலின் வேகமும், சுடுகலச் சக்தியும் இராணுவத்தைத் திணறடிக்க வைத்தது. பல மணிநேரமாகப் பயங்கரச் சண்டை தொடர்ந்தது. புலிகளின் அச்சொட்டான எறிகணைத் தாக்குதல்கள் படைத் தரப்பில் பெரும் உயிர்ச் சேதத்தை விளைவித்தமையால் மனவுறுதி தளர, எஞ்சிய படையினர் சிதறியோடினர். நெடுங்கேணிப் பிரதான தளம் புலிகளிடம் வீழ்ந்தது. ஒட்டுசுட்டானிலிருந்து முன்னேறிய புலிப் படையணிகள் ஒட்டுசுட்டான் – நெடுங்கேணி வீதி ஓரமாக அமைந்திருந்த சிறு முகாம்களைத் தாக்கி அழித்த பின் நெடுங்கேணியில் களமிறங்கிய படைப் பிரிவுடன் இணைந்து கொண்டன. நவம்பர் மாதம் இரண்டாம் நாள் மாலைப் பொழுதுக்குள் ஒட்டுசுட்டான் நெடுங்கேணிப் பிரதேசத்தைத் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த புலிப் படை திகைப்பூட்டும் போரியல் வரலாற்றைப் படைத்தது. ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய இருசமர் முனைகளையும் ஒருங்கிணைப்புத் தளபதியாக வழிநடத்தினார் எமது இயக்கத்தின் மூத்த தளபதி கேணல் சொர்ணம்.

ஓயாத, தொடர்ச்சியான, மின்னல் வேகத் தாக்குதல்களை நிகழ்த்தி, எதிரியைத் திகைப்பூட்டி நிலைகுலையச் செய்வதே 'ஓயாத அலை' மூன்றின் தந்திரோபாய உத்தியாகக் கையாண்டார் பிரபாகரன். விடுதலைப் புலிகளின் படைபலம், சுடுகல வலு, நவீனமயப் படுத்தப்பட்ட விசேட படையணிகள், அவற்றின் ஒருங்கிணைவான அசைவியக்கம், தாக்குதல் தந்திரங்கள் - இவை குறித்து தவறான மதிப்பீடுகளைக் கொண்டிருந்த சிங்கள இராணுவ உயர் பீடத்துக்கு, 'ஓயாத அலை' மூன்றின் வலிந்து தாக்குதற் பரிமாணம் ஆச்சரியத்தையும் திகைப்பையும் கொடுத்தது.

ஒருநாள் சமருடன் ஒட்டுசுட்டான் நெடுங்கேணிப் பிரதேசத்தைக் கைப்பற்றியதோடு பிரபாகரன் சண்டைக்கு ஓய்வு கொடுக்கவில்லை. ஓயாத அலைகள் போர் தொடர்ந்தது. ஒட்டுசுட்டானிலிருந்து கரிப்பட்டமுறிப்பை நோக்கி முன்னேறிய புலிப் படையணிகள், இராணுவ நிலைகளையும் சிறு முகாம்களையும் தாக்கியழித்து, 13 கிலோமீற்றர் வரையான வீதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, பகல் வேளை மணவாளன் பட்டமுறிப்பு என்னுமிடத்தை நெருங்கினர். இத்துடன் முதல் நாள் சமர் முடிவுக்கு வந்தது.

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள், விடுதலைப் புலிகளின் இன்னொருபடைத்தொகுதி அம்பகாமம் படைத் தளம் மீது பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தது. வெளிப் பாதுகாப்பு நிலைகளைத் தாக்கியழித்து, முகாமின்மையப் பகுதிக்குள் ஊடுருவிச் சென்ற புலிப்படை வீரர்கள், அம்பகாமம் பிரதான தளத்தை முற்றுகையிட்டுத் தாக்கினர். புலிகளின் வீராவேசத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாது படையினர் சிதறியோடப் படைமுகாம் புலிகளின் வசம் வீழ்ந்தது. அம்பகாமத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்



கொண்டு வந்த பின்பு அங்கிருந்து முன்னேறிய எமது படையணிகள், ஒட்டுசுட்டானிலிருந்து முன்னேறிய வந்த படைப் பிரிவுடன் ஒன்றிணைந்து, மணவாளன் பட்டமுறிப்பில் அமைந்திருந்த இராணுவத்தின் பெரும் தளத்தை முற்றுகையிட்டுத் தாக்கினர்.

இந்தச் சமர் முனையைத் தளபதி கேணல் தீபன் வழிநடத்த, லெப். கேணல் சேகரின் தலைமையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் ஜெயந்தன் படையணியும் சண்டையில் பங்கு கொண்டன. பல மணி நேரமாகக் கடும் சண்டை நிகழ்ந்தது. இறுதியில் படைத் தளம் புலிகளின் வசம் வீழ்ந்தது. மணவாளன் பட்டமுறிப்புப் பகுதிகளை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்பு, புலிப் படையணிகள் அங்கிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவில் இருந்த கரிப்பட்டமுறிப்பு நோக்கி முன்னேறின.

இது இவ்வாறிருக்க, நெடுங்கேணியில் எமது பாதுகாப்பு நிலைகளை உறுதிப்படுத்திய பின்பு, கேணல் சொர்ணத்தின் தலைமையில் நைனாமடு நோக்கி முன்னேறிய புலிப் படையின் ஒரு தொகுதி, இராணுவத்தின் வீதியோரக் காவலரண்களைத் துடைத்தெறிந்தது. குளவிசுட்டான் பிரதான தளப்பகுதியை நெருங்கிய பொழுது எதிரியின் மூர்க்கமான எதிர்ப்பைச் சந்தித்தது. இரு தரப்பும் சரமாரியாகப் பீரங்கி, மோட்டார் குண்டுகளைப் பரிமாறி மோதிக் கொண்டன. எதிரியின் பிரதான தளப் பகுதி எமது துல்லியமான பீரங்கி எறிகணைகளுக்கு இலக்காகி சிதைவுற்றது. எமது தாக்குதலின் வேகத்துக்கும் வீச்சுக்கும் முகம் கொடுக்க முடியாது இராணுவத்தினர் பின்வாங்கி ஓட்டம் பிடித்தனர். குளவிசுட்டானும் அதற்கு அருகிலிருந்த குறிசுட்டகுளமும் புலிகளிடம் வீழ்ந்தன.

நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் நோக்கியும், ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் நோக்கியும் இரு கள முனைகளில் புயல் வேகத்தில் புலிப் படைகள் முன்னேறிச் சென்று இராணுவத்தின் படை முகாம்களை நிர்மூலம் செய்து கொண்டிருந்த வேளையில் இம்ரான் - பாண்டியன் படையணி உள்ளிட்ட புலிகளின் இன்னொரு படைத்தொகுதிநெடுங்கேணியிலிருந்து வேறு திசையில் ஒதியமலை நோக்கி முன்னேறியது. தலைவரின் போர்த் திட்டத்துக்கு அமைய, அவரது விசேட பணிப்பின் பேரில் மணலாற்றுச் சிங்களக் குடியேற்றத்தின் பாதுகாப்புத் தளமாக இயங்கிய ஒதியமலையைக் கைப்பற்றும் நோக்குடனேயே எமது படையணி அந்தப் பகுதியை நோக்கி நகர்ந்தது. எமது வீரர்கள் ஒதியமலையை அடைந்ததும், இரு படையணிகள் மத்தியிலும் உக்கிரமான சண்டை வெடித்தது. தலைவரின் விருப்பை நிறைவேற்ற வீராவேசத்துடன் போராடிய புலிப் படை, இராணுவத்தின் கடும் எதிர்ப்பையும் முறியடித்து மணலாற்றுப் பிரதேசத்தின்நுழைவாயிலில் அமைந்த ஒதியமலைப் பகுதியைத் தன் வசப் படுத்தியது.

(தொடரும்...)

# பெரியார் செல்வாவுக்கு துரோகம் இழைக்காதீர்!

## அனைவரிடமும் மிகவும் வருந்திக் கேட்கிறார் மூத்த தலைவர் சங்கரி



தமிழ் மக்கள் எவரும் பெரியார் செல்வாவுக்குத் துரோகம் செய்யாதீர்கள். இதனை நான் உங்களிடம் வருந்திக் கேட்கிறேன்.

-இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

தந்தை செல்வாவின் நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தந்தைசெல்வாவின்நினைவு தினத்தை நாம் அனைவரும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

மிக வேதனைக்குரிய விடயம் என்னவெனில், பல பிரமுகர்கள் கூட அவர் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் என்றே கூறி வருகின்றனர். அதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக அவரே, தமிழர் ஐக்கிய முன்னணி எனவும், பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி என்றும் பெயர் மாற்றமாகிய கட்சியின் ஸ்தாபகர் ஆவார்.

1972 மே மாதம் 14 ஆம் திகதி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்ற ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் இயங்கிய கட்சியும், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சியுமாகிய இரு பெரும் அரசியல் கட்சிகள் 23 ஆண்டுகள் பிரிந்து இருந்துவிட்டு மீண்டும் ஒன்றாக இணைந்தன. இவ்விரு கட்சிகளின் இணைவு தமிழ் ஜனநாயக உலகில் நடந்தேறிய மிகப்பெரிய சாதனையாக கருதப்பட்டது.

மிக்க சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும். இந்நிகழ்வு தமிழர் பரந்து வாழும் உலக நாடுகளில் பெரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டதை மறக்க முடியாது. மக்கள் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்ததை தமிழ் மக்களின் பல பிரிவினர் ஒன்று சேர்ந்ததாகக் கருதாது, அனைவரும் சங்கமித்த விடயமாகவே கருதினர்.

ஒரு பொதுச் சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியன் சின்னத்தில் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட முன்பே தந்தை செல்வா காலமாகிவிட்டார். ஆனால், தமிழ் மக்கள் தமது பெரும் தலைவர்களுக்குத் தமது நன்றியை திறம்பட காட்டிவிட்டனர். போட்டியிட்ட ஒருவரைத் தவிர ஏனைய 18 பேரும் பெரும் வெற்றியீட்டினர். கல்குடா தொகுதியில் மட்டும் நாம் சிறு வித்தியாசத்தில் தோற்றோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.டபிள்யூ. தேவநாயகத்தின் வீட்டிலேயே எமது பொதுக் குழுக் கூட்டங்கள் பல நடைபெற்றன. நாம் சிருஷ்டித்த கட்சியின் உதயசூரியன் கொடியை அவர் இல்லத்திலேயே, அவரைக்கொண்டே, முதல் தடவையாக ஏற்றுவித்தோம் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

சோல்பரி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோரால் உருவாக்கப்பட்டு, மிகப்பிரபலமடைந்த கட்சிதான் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ். 1947 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின் பிரஜாவுரிமை விடயத்தில் ஏற்பட்ட தப்பான அபிப்பிராயம் கட்சியில் பிளவை ஏற்படுத்தி, தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் தலைவராக ஜீ.ஜீ.பொன்னம்பலமும், பிரிந்துபோன குழுவில் தமிழரசுக் கட்சித் தலைவராக எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் செயற்பட்டனர்.

1970 ஆம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் உருவாகிய கட்சிக்கு புதிய குடியரசு அரசியல் சாசனத்தை உருவாக்கும் ஆணை வழங்கப்பட்டது. வரப்போகும் ஆபத்தை, இனத்துக்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்களை அறிந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது கௌரவத்தை ஒருபுறம் தள்ளிவிட்டு, தனது தள்ளாத வயதிலும் 23 வருட விரோதத்தை வளர்த்துவந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் வீட்டுக்குச் சென்றபோது அதே பெருந்தன்மையுடன் "வாருங்கள் செல்வா நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? என்று கேட்ட போது..." "ஜீ.ஜீ. இனியும் நாம் பிரிந்திருக்க முடியாது இனத்துக்காக ஒன்றுசேர வேண்டிய காலம் வந்துவிட்டது" என்று கூறினார் செல்வா. இந்த சில வார்த்தைகளுக்குள் 23 வருட பகைமை புதைக்கப்பட்டு, தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து சங்கமமாகி 1972 மே மாதம் 14 ஆம் திகதி உருவாகியதே தமிழர் விடுதலை கூட்டணியாகும். அந்த நிமிடமே இரு தலைவர்களும் தத்தமது கட்சிகளுக்குப் புத்துயிர் கொடுப்பதில்லை என்ற முடிவை எடுத்திருந்தனர். இதற்கு முன்னோடியாகத்தான், தந்தை செல்வா தனது தலைமைப் பதவியை ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடனும் மலையக தமிழர் தலைவர் எஸ். தொண்டமானுடனும் அதேபோன்ற நோக்குடனும் பகிர்ந்து கொண்டார். இதுவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாறாகும் என்பது மட்டுமல்ல தமிழரசுக் கட்சியினுடைய முடிவுமாகும்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினுடைய மறு பிறப்பை உதாரணம் காட்டி சிலர் நியாயமற்ற முறையில் தமிழரசுக் கட்சியை, புதுப்பித்துள்ளனர். அது பொருத்தமற்ற விவாதமாகும். ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் தமிழ் காங்கிரஸை புதுப்பிக்க அனுமதி வழங்கியிருக்கமாட்டார்.

ஆனால் மன்னிக்க முடியாத பெரும் தவறு அந்தக் கட்சிக்கு புத்துயிர் கொடுக்க, அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா செய்த தவறாகும். இதே நிலை தமது கட்சிக்கு வரக்கூடாது என்ற நோக்கோடு அந்தக் கட்சியின் பதிவை தொடர்ந்து அமிர்தலிங்கம் வைத்திருந்தமைக்கு உரிய காரணத்தை அவரின் பாரியார் மிகத் தெளிவாக ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார். அதில் ஒரு பகுதி மாத்திரம் இங்கு தரப்படுகின்றது.

"1972 ஆம் ஆண்டு இரு பிரதான தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கிய போது தமிழ் அரசியலில் வரலாறு பதிக்கப்பட்டது. அதன் மூலம் தமிழ் இனம் முழுவதும் ஒன்றிணைக்கப்பட்டு பிரசித்தி பெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானமும். 1976 இல் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழ் இனம் அதனை உறுதிப்படுத்தி அடுத்துவந்த 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 18 உறுப்பினர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக அனுப்பியது. மேலும் விரும்பத்தகாத சக்திகள் எவையும் தமிழரசுக் கட்சியின் சின்னத்தையும், அதன் பெயரையும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே, எனது கணவர் தமிழரசுக் கட்சியின் பதிவை பாதுகாத்து வைத்தார்.

தமிழரசுக் கட்சியை அவர் ஒருபோதும் புனரமைக்க எண்ணவில்லை. மேலும் அவருடைய அறிக்கையில், அவரால் வளர்க்கப்பட்ட சிலர் தமிழரசுக் கட்சியின் பெயரை துஷ்பிரயோகம் செய்யவும், அதனை புனரமைக்க முயல்வதும் கவலைக்குரியது.

இவர்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையையே இவர்கள் முறியடித்திருக்கின்றார்கள். எனவே தமிழரசு கட்சியின் புனரமைப்புக்கு நான் அங்கீகாரமோ, அல்லது ஆதரவோ அளிக்கவில்லை என்பதை எல்லோருக்கும் திட்டவட்டமாகத் தெளிவாக கூறுகின்றேன்.

அத்துடன் இது எமது பெருந்தலைவர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியை அழித்து விடும் ஒரு தந்திரோபாயம் என்ற கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியை புதுப்பிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியினருடன் தொடர்பு கொண்டு அவர்களின் கட்டளைக்கமையவே தமிழரசுக் கட்சியைப் புதுப்பிக்கின்றார் என்ற செய்தித் தணிக்கை கைவசம் உண்டு. அவசியம் ஏற்படின் அதை சமர்ப்பிக்க முடியும்.

இந்த நிலையில் தந்தை செல்வா அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும், இலட்சியம் நிறைவடைய வேண்டும் என நாம் விரும்பினால் அதற்கேற்ற வகையில் செயற்படுவோமாக. தமிழ் காங்கிரஸ் கட்சியைப் போலல்லாமல் தமிழரசுக் கட்சி செயலற்றிருந்து 28 ஆண்டுகளின் பின்பு புதுப்பிக்கப்பட்டுள்ளது. -என்றுள்ளது. (ஐ)

# திருமலை பெற்றோல் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கத் தயாரில்லை!

## மேல் மாகாண முதலமைச்சர் பாய்ச்சல்

கொழும்பு, ஏப்.26

திருகோணமலை பெற்றோல் தாங்கிகள் எதனையும் இந்தியாவுக்கு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.

பெற்றோலியத் துறை ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் நடத்திய பேச்சு தோல்வியடைந்த போது, ஜனாதிபதியிடம் வந்துள்ளனர்.

ஜனாதிபதி இந்த விடயம் சம்பந்தமாக தனக்கு தொடர்பில்லை எனவும், இதனை பிரதமருடன் சென்று தீர்த்துக் கொள்ளுமாறும் தெளிவாகக் கூறியுள்ளார்.

பிரதமர் சில சந்தர்ப்பங்களில் அம்பாந்தோட்டைக்குச் சென்று சீனாவுக்கு வழங்கப் போவதாக கூறுகின்றார்.

திருகோணமலைக்குச் சென்று இந்தியாவுக்கு வழங்கப் போவதாக கூறுகின்றார். இதில் ஏதாவதொன்றை ஜப்பானுக்கு வழங்குவதாகவும் கூறுகின்றார். இந்தநாட்டின் மக்கள் அரச சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

பெற்றோலியப் பிரச்சினைக்குப் பிரதமர்தான் தீர்வு வழங்க வேண்டியவராகக் காணப்பட்டார். இதனால் தான் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தாமல் பிரதமருடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# வெறிச்சோடிய நிலையில் மன்னார் எரிபொருள் நிலையங்கள்





மன்னார், ஏப்.26

நேற்று முன்தினம் திங்கட் கிழமை நாடு முழுவதும் பெற்றோல் தட்டுப்பாடு நிலவும் என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் நகரில் திங்கட் கிழமை காலை முதல் பெற்றோல் விநியோகம் நிறுத்தப்பட்டு இருந்தது.

## ஒரு நிலையத்தில் மட்டும் விநியோகம்

அதே நேரத்தில் நகரத்துக்கு அப்பாலுள்ள எரிபொருள் நிலையங்களில் பிற்பகல் வரையுடன் எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோதும் எரிபொருள் தீர்ந்த நிலையில் நேற்று மாலை வேளைக்குப் பின் எரிபொருள் நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

மன்னார் நகரில் மாந்தை வேற்று எரிபொருள் நிலையம் அத்தியாவசிய சேவை தேவைகளுக்காக வைத்திருந்த எரிபொருளை நேற்று செவ்வாய்க் கிழமை காலை முதல் விநியோகிக்க ஆரம்பித்தது.

இதன்போது அங்கு பெரும் நெருக்கடி காணப்பட்டது.

(ஐ-112)

### மத்திய கிழக்குக்கு தொழிலுக்குச்சென்ற

## 156 பணிப் பெண்கள் நாடு திரும்பினர்!

வேலை வாய்ப்புகளைப் பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல்வேறு சித்திரவதைகளை எதிர் நோக்கிய 156 இலங்கை பெண்கள் நேற்றுமுன் தினம் காலை நாடு திரும்பியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வாறான சித்திரவதைகளை எதிர் நோக்கிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இந்த வருடத்தில் கடந்த சில மாதங்களில் மாத்திரம் நாடு திரும்பினர் என்று கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், குவைத்தில் இருந்து 71 பேரும், கட்டாரில் இருந்து 27 பேரும், சவூதி அரேபியாவில் இருந்து 58 பேரும், நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலான பெண்கள், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்தப் பெண்களில் முற்றாக அங்கவீனமுற்ற 4 பெண்களும் மன நிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருவரும் அடங்குகின்றனர் என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு வைத்திய சிகிச்சைகள் மறுப்பு

கொழும்பு, ஏப்.26

கொழும்பில் அமைந்துள்ள மகஸின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு வைத்திய சிகிச்சைகள் மறுக்கப்பட்டுவருகின்றன என்று தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்துக் கொள்வதற்கான தேசிய அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் தேசிய அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை மாரிமுத்து சக்திவேல் தெரிவித்தவை வருமாறு:-

1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க மீதான தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் வரதராஜன் என்பவர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். அந்தத் தமிழ் அரசியல் கைதி கடந்த 21ஆம் திகதி சுகவீன முற்ற நிலையில் சிறைச்சாலை வைத்திய அதிகாரியின் பணிப்புரைக்கு அமைய வெலிக்கடை சிறைச்சாலை வைத்திய சாலைக்குக் கொண்டு

### விசனம் தெரிவிக்கிறார் அருட்தந்தை சக்திவேல்




செல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் இருந்த சந்தர்ப்பத்தில் அவர் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். - என்றார். (எ)

## இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப்.26

நாடளாவிய ரீதியில் உள்ள தமிழ், சிங்கள அரசபாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளன.


முதலாம் தவணைக்கான விடுமுறை கடந்த 5ஆம் திகதி வழங்கப்பட்ட நிலையில் இன்று முதல் மீண்டும் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், பாடசாலை சுற்றுச் சூழலை சுத்தம் செய்யும் நோக்குடன் விசேட சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நிலவும் அதிக வெப்பமான கால நிலை காரணமாக ஏற்படக் கூடிய சிரமங்களைத் தவிர்க்க மாணவர்களை வெளிச்செயற்பாடுகளுக்காக அனுப்புவதைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும், கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பெந்தோட்டையில் விபத்து; 17 பேர் காயம்



கொழும்பு, ஏப்.26

காலி, பெந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் 17 பேர் காயமடைந்தனர்.

அளுத்கமவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த பொருள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றும் மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றும் நேற்று அதிகாலை மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது லொறி மற்றும் பஸ் சாரதி உட்பட 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நாகொடை, பலப்பிட்டிய மற்றும் பெந்தோட்டை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இதுதொடர்பில் பெந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

### இலங்கைப் பணியாளர் சேவையைப் பெற பஹ்ரெய்ன் விருப்பம்

இலங்கையின் தொழிலாளர் சேவையைப்பெற்றுக் கொள்ள பஹ்ரெய்ன் எதிர்பார்த்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பஹ்ரெய்ன் நாட்டின் பிரதமர் அப்துல்லாஹ் பின் கலீபா மற்றும் இலங்கை தூதுவரான ஏ.சாஜ் யு மென்டிஸ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில், இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பஹ்ரெய்ன் நாட்டில் விருந்தோம்பல் சார் துறைகளில் பணிபுரிவதற்காக இலங்கைப் பணியாளர்கள் கோரப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கதிர்காமம் கிரிவிகாரையில் வழிபாடு



வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமத்துக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிரிவிகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் பின்னர் கதிர்காமம் ஆலயத்திலும் வழிபாடுகளில் ஈடுபட்டார். அமைச்சர் தயா கமகே உள்ளிட்டோரும் இந்த வழிபாடுகளில் ஜனாதிபதியுடன் கலந்து கொண்டனர்.

## கனடாவில் இலங்கையர் கொலை; வழக்கின் தீர்ப்பு அடுத்த வாரத்தில்!

கனடாவில் கொலை குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கையர் ஒருவரது வழக்கு அடுத்த வாரம் நிறைவுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமலன் தண்டபாளி தேசிகர் என்ற இலங்கையர், மற்றுமோர் இலங்கையரான ஜெயராசன் மாணிக்கராஜா என்பவரை கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், அமலன் இந்தக் குற்றச்சாட்டை மறுத்து வருகிறார்.

தமது மனைவியிடம் அவமரியாதையாக நடந்து கொண்டமைக்காக, ஜெயராசன் மாணிக்கராஜாவை பல தடவைகள் எச்சரித்துள்ள போதும், தாம் அவரை கொலை செய்யவில்லை என்று நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது அவர் வாதிட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டு ஜுன் 23ஆம் திகதி இந்தக் கொலை இடம்பெற்றது.

இதுதொடர்பில் இரசாயன பகுப்பாய்வு அறிக்கை முன் வைக்கப்படவுள்ளதுடன், அமலனின் மனைவியிடம் சாட்சி பதிவும் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர், வழக்கின் தீர்ப்பு அடுத்த வாரம் வெளியிடப்படலாம் என்று கனேடிய ஊடகம் தெரிவித்துள்ளது. (எ)

## கொரியாவில் பதற்றம் ஏற்படின் இலங்கையரை அழைக்க திட்டம்

### தயார் என்கிறார் அமைச்சர்

கொரியாவில் ஏதாவது ஒரு சூழ்நிலையில் போர் நிலை ஒன்று ஏற்படுமாயின் அங்குள்ள இலங்கை பணியாளர்கள் அனைவரையும் மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர விசேட வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தென் கொரியாவில் மீன்பிடி மற்றும் கைத்தொழில் துறையில் தற்போதைய நிலையில் சுமார் 26 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.- என்றார்.

## அனர்த்தம் நிகழ்ந்தால் மக்களை தங்க வைக்க விசேட நிலையங்கள்

### மேல் மாகாணத்தில் ஏற்பாடு

மேல் மாகாணத்தில் அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதிக் கப்படும் மக்களைத் தங்க வைப்பதற்கான மூன்று விசேட நிலையங்களை நிறுவ இடர் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பொருட்டு மீதொட்டமுல்ல பிரதேசத்திலுள்ள நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூன்று கட்டடங்களை பயன்படுத்துவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுரபிரிய தர்ஷன யாப்பா குறிப்பிட்டார். இந்தக் கட்டடங்களை பொறுப்பேற்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவையில் அவர் சமர்ப்பிக்கவுள்ளார்.

குறிப்பிட்ட கட்டடங்களின் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத் தால் முன்னெடுக்கப்படவுள்ளன.

மக்களுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார். (எ)

## மோதல்கள், கருத்து வேறுபாடுகள் தணிந்து

# இரு அணிகளும் பேசும் நிலையில்! அதற்கான உகந்த சூழல் இப்போது!!

## பன்னீருக்கும் நம்பிக்கை

சென்னை,ஏப்.26

அ.தி.மு.க. இரு அணிகள் இணைகின்றமை தொடர்பான பேச்சை முன்னெடுப்பதற்கு உகந்த சூழல் உருவாகி இருக்கிறது.

- இவ்வாறு ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் ஆலோசனைக்கூட்டம் நடத்திவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், கே.பி.முனுசாமி, பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க. கட்சி மற்றும் இரட்டை இலைச் சின்னம் ஆகியவற்றை மீட்பதற்காக எடப்பாடி பழனிச்சாமியின் அ.தி.மு.க. அம்மா அணியினரையும் ஓ.பன்னீர்செல்வத்தின் அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணியினரையும் இணைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த இணைப்பு பேச்சு அணியில் அமைச்சர் வைத்திலிங்கம் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவும், அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணியில் கே.பி.முனுசாமி தலைமையில் 7 பேர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டது.

இரு அணிகளும் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பேச்சைத் தொடங்குவதற்கு சில மணி நேரத்துக்கு முன்பு இரு தரப்பினரிடையே மீண்டும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் அ.தி.மு.க. இரு அணிகள் இணைப்பு பேச்சு தொடங்காமலேயே தோல்வியில் முடிந்து விட்டது.

இரு அணிகளையும் இணைக்க ஒரு பக்கம் சமரச முயற்சிகள் நடந்த நிலையில்,



மற்றொரு பக்கம் அதை சீர்குலைக்கும் வகையில் தலைவர்களின் பேச்சு அமைந்தது. முதலில் அமைச்சர்கள் ஜெயக்குமார், தம்பிதுரை ஆகியோரால் சர்ச்சை ஏற்பட்டது. பின்னர் அமைச்சர் சி.வி. சண்முகம் பேதியமை முரண்பாடாக அமைந்தது.

மேலும் அ.தி.மு.க.வின் நாளேடான நமது எம்.ஜி.ஆர் பத்திரிகையில் சசிகலா, டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாக வந்த செய்திகள், பன்னீர் அணியினரிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது.

எடப்பாடி தரப்பு அ.தி.மு.க. அம்மா அணியினர் மீது நம்பகத் தன்மை இல்லாத நிலையை அவர்களிடம் உருவாக்கியது.

இதுதான் இரு அணி இணைப்பு முயற்சியில் விழுந்துள்ள மிக முக்கிய முட்டுக்கட்டையாகக் கருதப்பட்டது.

இந்நிலையில், பேச்சுக்காக அமைக்கப்பட்ட குழுவுடன் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனை நடத்தி இவ்வாறான கருத்தை வெளியிட்டிருக்கின்றமை இரு தரப்பிலும் பேச்சுக்கான ஒரு நல்ல சூழல் ஏற்பட்டுள்ளமையை புலப்படுத்துகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இலங்கைக் கடற்படை பறிமுதல் செய்த

# இந்தியப் படகுகள் மீட்காதமை ஏன்? விளக்கம் கேட்கிறது உயர் நீதிமன்று!

இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க நீதிமன்றம் உத்தரவிட்டும், நடவடிக்கை எடுக்காத இந்திய மத்திய வெளியுறவுத் துறைச் செயலர் மீது, நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கோரிய மனுவுக்கு, விளக்கம் பெற்றுத் தெரிவிக்குமாறு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் உப்பூரைச் சேர்ந்த திருமுருகன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

தொண்டி, இராமேஸ்வரம், எஸ்.பி.பட்டணம் உள்ளிட்ட பகுதிகளில் மீன்பிடித் தொழிலை நம்பி ஏராளமானோர் வாழ்ந்து வருகின்றனர். மீனவர்கள் 30 லட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த நிலையில், இந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றமை, படகுகளை பறிமுதல் செய்கின்றமை வாடிக்கையாகி வருகிறது. இதுவரை 120 படகுகள் இலங்கை கடற்படையிடம் உள்ளன. இதனை மீட்டால் மட்டுமே மீனவர்கள் தொழில் செய்ய முடியும். எனவே, மீனவர்களின் படகுகளை இலங்கையிடம் இருந்து மீட்க உத்தரவிட வேண்டும் எனக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன்.

மனுவை விசாரித்த நீதிமன்றம், மனு மீது இரண்டு மாதங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவுத் துறைச் செயலருக்கு ஜனவரி 24 ஆம் திகதி உத்தரவிட்டது.

ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை செயற்படுத்தாத, மத்திய வெளியுறவுத்துறைச் செயலர் மீது நீதி மன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என்றுள்ளது.

மனுவை விசாரித்த நீதிபதிகள், மனு தொடர்பாக மத்திய வெளியுறவுத் துறைச் செயலரிடம் விளக்கம் கேட்டு தெரிவிக்குமாறு மத்திய அரசு வழக்குரைஞருக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (ஐ)

# அ.தி.மு.க. அலுவலகத்தில் இருந்து சசிகலாவின் படங்களை அகற்றுங்கள்!

## பன்னீர் அணி மதுசூதனன் வலியுறுத்து

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திலிருந்து சசிகலாவின் புகைப்படங்கள் கொண்ட பதாகைகளை அகற்ற வேண்டும் என பன்னீர் அணியைச் சேர்ந்த மதுசூதனன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவால் ஏற்பட்ட துயரம் தமிழக மக்களின் இதயங்களை விட்டு இன்னும் அகலவில்லை. அவரது மர்ம மரணத்துக்கு நீதி கிடைக்க வேண்டும். கழகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற விசுவாசத் தொண்டர்களின் மற்றும் தமிழக மக்களின் குரல்கள்தான் நாங்கள் தொடங்கியிருக்கும் தர்மயுத்தத்தின் குரல்.

விசுவாசத் தொண்டர்கள் மற்றும் தமிழக மக்களின் எண்ணங்கள் ஆகியனவற்றைப் பிரதிபலிக்கும் அந்த தர்மயுத்தத்தின் வீரியத்தைக் குறைப்பதற்கு சிலர் முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், தர்மயுத்தத்தின் வீரியம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

சசிகலாவின் புகைப்படங்களை அ.தி.மு.க. தலைமைக் கழகத்திலிருந்து உடனே அகற்றி அதன் புனிதத்தை காப்பாற்ற வேண்டும் என்று விசுவாசத் தொண்டர்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.-என்றுள்ளது. (ச)

## புதிய கட்சி ஒன்று வேண்டும்!

# ரஜனிக்கு அழைப்பு விடுத்து கோவையில் சுவரொட்டிகள்



கோவை,ஏப்.26

கட்சி தொடங்க ரஜனிக்கு அழைப்பு விடுத்து, கோவையில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கோவை மாவட்ட மக்கள் நல்வாழ்வு மன்றம், கோவை பசுமை பாதுகாப்பு இயக்கம் மற்றும் இயற்கை ஆர்வலர்கள், கோவை மாவட்ட சிறு, குறு தொழில் முனைவோர் சங்கம் போன்ற பெயர்களில் மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

'ரஜனிகாந்த் அவர்களே! கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தண்ணீர் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. விவசாயம் அழிகிறது. குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்குக் காரணம் கோவையை சுற்றியுள்ள நீர்நிலைகளை யாரும் சரி செய்யாததே. விவசாயிகளின் துயரம் நீக்க, நீங்கள் தனிக்கட்சி தொடங்க வேண்டும். உடனே விவசாயிகள் மாநாட்டைக் கூட்டி, விவசாயிகளின் விளைநிலங்களை பாதுகாக்க புதிய சட்டம் இயற்ற நாடாளுவேன் எனப் பிரகடனப்படுத்த வேண்டும்.' -என்றுள்ளது. (ச)

# சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட் தாக்குதல்: தமிழக பொலிஸார் நால்வர் உட்பட 25 பேர் சாவு!

சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்தியதில் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் பொலிஸார் நால்வர் உட்பட 25 பேர் உயிரிழந்தனர். அறுவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். பதில் தாக்குதலில் 10 இற்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சேலத்தைச் சேர்ந்த திருமுருகன், தஞ்சாவூரைச் சேர்ந்த பத்மநாதன், திருவாரூரைச் சேர்ந்தசெந்தில்குமார், மதுரையைச் சேர்ந்த அழகுபாண்டி ஆகியோரே உயிரிழந்த தமிழக வீரர்கள் ஆவர்.

மாவோயிஸ்ட் ஆதிக்கம் நிறைந்த பஸ்தார் மண்டலத்துக்குட்பட்ட சுக்மா மாவட்டம், சிண்டகுபா அருகே உள்ள கலாபதர் வனப்பகுதியில் வீதி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் வகையில், மத்திய ரிசர்வ் பொலிஸ் 74 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த 99 வீரர்கள் அங்கு முகாமிட்டிருந்தனர்.



இந்நிலையில் வனப் பகுதியில் மறைந்திருந்த மாவோயிஸ்ட் கும்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்திய ரிசர்வ் பொலிஸாரை நோக்கி கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, வீரர்களும் பதில் தாக்குதல் நடத்தினர். பின்னர் மாவோயிஸ்ட்கள் வீரர்களின் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வனப் பகுதிக்குள் சென்று விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பிரதமர் மோடி இரங்கல்

பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், 'மாவோயிஸ்ட் தாக்குதலில் பலியான வீரர்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது தியாகம் வீண் போகாது. இந்தத் தாக்குதல் கோழைத்தனமானது. நிலைமையை மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது' என பதிவிட்டுள்ளார்.

## சிரியாவுக்கு எதிராக கெரில்லாப் போர்: அழைப்பு விடுத்துள்ளது அல்குவைதா!

சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அசாத் மற்றும் அவரது நட்பு நாடுகளுக்கு எதிராக கெரில்லா போரை நடத்துவதற்கு தயாராகுமாறு ஆயுதம் ஏந்திய சிரிய எதிர்ப்பாளர்களுக்கு அல்குவைதா அமைப்பின் தலைவர் அய்மன் அல்-சவாஹிரி அழைப்பு விடுத்துள்ளார்.

சிரியா கடவுளுக்கு மட்டுமே அடிபணிய வேண்டும் என்று பெயரிடப்பட்டு இணையத்தில் அவர் வெளியிட்டுள்ள ஒலிப்பதிவு ஒன்றிலேயே இவ்வாறு போருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிரியக் கிளர்ச்சியாளர்கள் பொறுமையுடன் நீண்ட போருக்குத் தங்களைத் தயார்படுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ள அல்குவைதா தலைவர், கெரில்லாப் போர்முறையின் மூலோபாயம் எதிரிகளை வலுவிழக்கச் செய்யும் என்பதால், கொரில்லா போர் முறையை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளார்.

அல்குவைதா அமைப்பினர் சிரியாவில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவ முயற்சித்து வருகின்ற நிலையில், மேற்கத்தேய மற்றும் அதன் நட்பு நாடுகள் அதனைத் தடுக்க போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கென்யாவில் கோர விபத்து: 27 பேர் பரிதாபமாகச் சாவு!

### மேலும் 20 பேர் படுகாயம்!!



நைரோபி, ஏப்.26

கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியிலுள்ள மோம்பாஸா நெடுஞ்சாலையில் நேற்று பஸ் ஒன்றுடன் சமையல் எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறி மோதியதில் 27 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்; 20 பேர் காயமடைந்தனர்.

கென்யா நாட்டின் துறைமுக நகரமான மோம்பாஸாவில் இருந்து தலைநகர் நைரோபியை நோக்கி நேற்று அதிகாலை சுமார் 50 பயணிகள் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. நைரோபி -மோம்பாஸா தேசிய நெடுஞ்சாலையில் கிப்வேஸி என்ற பகுதி வழியாக பஸ் சென்றபோது முன் னால் சென்ற ஒரு வாக னத்தை அந்த பஸ் சாரதி முந்திச் செல்ல முயன்றார்.

அப்போது, சமையல் எண்ணெய் ஏற்றியபடி, எதிர்த்திசையில் வேகமாக வந்த ஒரு லொறி பஸ் மீது பயங்கரமாக மோதியது. இந்தக் கோர விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர். சுமார் 20 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. (எ)

# வடகொரியா தொடர்பில் பேச செனட்சபைக்கு ட்ரம்ப் அழைப்பு!

### வழமைக்கு மாறாக வெள்ளை மாளிகைக்கு வருமாறு



வொஷிங்டன், ஏப்.26

வடகொரியாவின் செயற்பாடுகள் தொடர்பில் விவாதிக்கும் வகையிலான மாநாடொன்றுக்கு அமெரிக்க செனட் உறுப்பினர்களுக்கு வெள்ளை மாளிகை அழைப்பு விடுத்துள்ளது.

இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஜேம்ஸ் மார்டிஸ் உள்ளிட்ட 100 செனட் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணு ஆயுதச் சோதனைகள், அதனால் அண்டை நாடுகள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் என்பன தொடர் பில் அமெரிக்கா கூடுதல் அக்கறை கொண்டுள்ள நிலையிலேயே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் விவாதிப்பதற்கு வெள்ளை மாளிகை அதிகாரிகள், அமெரிக்க காங்கிரஸுக்கு செல்வதே வழமை.

ஆனால், வடகொரியா குறித்துப் பேச்சு நடத்துவதற்கு வழமைக்கு மாறாக இம்முறை செனட் உறுப்பினர்கள் ட்ரம்பால் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பாகிஸ்தான் சிவன் கோயிலில் வழிபட 20 ஆண்டுகளின் பின் அனுமதி!

பாகிஸ்தான் சிவன் கோயிலில் வழிபட 20 வருடங்களுக்குப் பின்னர் இந்துக்களுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தானின் அப்போட்பாத் மாவட்டத்திலுள்ள சிவன் கோயிலில் பாகிஸ்தான் இந்துக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக, அந்த நாட்டு தொண்டு நிறுவனம் சார்பில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், வழக்கை விசாரித்த மாவட்டத்தின் பெல்ஸார் உயர் நீதிமன்ற நீதிபதி அடீக் ஹுசைன் ஷா தலைமையிலான அமர்வின்போது, சிவன் கோயிலில் வழிபடுவதற்கு அந்த மக்களுக்கு உரிமை உள்ளது என்று 20 வருடங்கள் கடந்த நிலையில் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

மேலும், நில ஆக்கிரமிப்பு தொடர்பான வழக்கில் 20 வருடங்களுக்கு முன்பு அந்தக் கோயில் மூடப்பட்டதாகவும், தற்போது அந்த நிலம் கோயிலுடையது என்று அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# சிரியா மீது பொருளாதாரத் தடை; அமெரிக்கா அதிரடி நடவடிக்கை

### கிளர்ச்சியாளர் மீதான இரசாயனத் தாக்குதலை அடுத்து



வொஷிங்டன், ஏப்.26

சிரியாவில் இம்மாதத் தின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட சந்தேகத்துக்கு இடமான இரசாயன வாயுத் தாக்குதலின் எதிரொலியாக, சிரியா மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

அந்தவகையில், சிரிய அறிவியல் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் 271 ஊழியர்களின், அமெரிக்காவிலுள்ள அனைத்து சொத்துக்களையும் முடக்குமாறு கருவூலத்துறை உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்க குடிமக்கள் சிரியாவுடன் எந்தவொரு தொடர்பையும் பேணுவதைத் தடுக்கும் வகையிலேயே இந்தப் பொருளாதாரத் தடைகள் அமைந்துள்ளன.

மேலும், சிரிய சர்வாதிகார ஜனாதிபதி பஷர் அல்- அசாத்தின் கொடூரமான இரசாயன ஆயுதத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவிப் பொது மக்களின் உயிர்கள் காவுகொள்ளப் பட்டமையாலேயே விஞ்ஞான ஆதரவு மையத்தை இலக்கு வைத்து இந்த கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கருவூலத்துறையின் செயலாளர் ஸ்டீவன் நியூச்சன் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கான் ஷேக்ஹூன் நகரில் இம் மாத ஆரம்பத்தில் நடத் தப்பட்ட இரசாயன வாயுத் தாக்குதலில் நரம்பு பாதிப்புக்குள்ளாகி 80 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந் தனர் என்று அமெரிக்கா அறிவித் துள்ளது.

எனினும் இதுவொரு கட்டுக்கதை என்று தெரிவித்து வரும் சிரிய தரப்பு, இரசாயன வாயுத் தாக்குதல் இடம் பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஓடும் வானில் குண்டுவெடிப்பு பாகிஸ்தானில் 10 பேர் சாவு!

பாகிஸ்தான் நாட்டில் ஓடும் வானில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்து பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டில் பழங்குடிகள் அதிகம் வசிக்கும் கைபர் மாகாணத்தின் தலைநகராக உள்ள பெஷாவரில் கோதார் என்ற இடத்திலிருந்து சாடா நோக்கி நேற்றுக் காலை சென்று கொண்டிருந்த வான் ஒன்று குர்ரான் என்ற பகுதியை அண்மித்தபோது வானில் இருந்த சக்தி வாய்ந்த குண்டு பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதில் வானில் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 15 இற்கும் அதிகமானோர் படுகாயங்களுடன் பெஷாவர் நகர அரச மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடத்தை ‘சீல்’ வைத்துள்ள பொலிஸார் குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து தீவிரவிசாரணை நடத்தி வருகின்றனர். ரிமோட் கட்டுப்பாடு மூலம் வெடிக்கும் குண்டுகளை தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலில் பயன்படுத்தியிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த வான் குண்டு வெடிப்புத் தாக்குதலுக்கு இன்னும் எந்தத் தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## போதைக் கும்பல் இடையே மோதல்; மெக்ஸிக்கோவில் 35 பேர் உயிரிழப்பு!

மெக்ஸிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் கும்பல் மோதலில் 35 பேர் உயிரிழந்தனர். மெக்ஸிகோவில் பல்வேறு போதைப்பொருள் கடத்தல் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தொழில் ரீதியான போட்டியில் இந்தக் குழுக்களுக் கிடையே அவ்வப்போது வன்முறைச் சம்பவங்கள் வெடிக்கின்றன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம், சினலோவ் மாகாணத்தில் உள்ள வெவ்வேறு இடங்களில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே கடுமையான சண்டை ஏற்பட்டது. இந்த வன்முறை சம்பவங்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். இதே போல், மிசோகன் மாகாணத்தில் 2 போதைப் பொருள் கடத்தல் கும்பல்களைச் சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையில் 9 பேர் உயிரிழந்தனர். இதற்கிடையே, குர்ரெர்ரோ மாகாணத்தில் வெவ்வேறு பகுதிகளில் 8 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அதேபோல் வெராகுருஸ் மாகாணத்தில் இருந்து 6 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

## கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார் ஜனாதிபதி வேட்பாளர்

பிரான்ஸின் தேசிய முன்னணிக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து, ஜனாதிபதி வேட்பாளர் மெரின் லீ பென் நேற்றுமுன்தினம் விலகியுள்ளார்.

பிரான்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனா திபதித் தேர்தல் நடைபெற்றது. முதல் சுற்றில் தகுதி பெற்ற அவர், அடுத்த மாதம் நடைபெறும் இரண்டாம் சுற்றில் போட்டியிடவுள்ளார்.

எனினும், முன்னாள் வங்கியாளரான இமானி வேல் மெக்ரோவுக்கே அதிக வெற்றி வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் தமது வெற்றி குறித்து பிரத்தியேக அவதானம் செலுத்தும் நோக்கில் தாம் அந்தப் பதவியில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இது தற்காலிக இராஜினாமா தான் என்றும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்பு மீண்டும் தலைவராக இருப்பேன் என்று கூறியுள்ளார். (எ)




# மீண்டும் இலங்கை ஒருநாள் அணியில் லசித் மலிங்க!

கொழும்பு, ஏப்.26

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு அதிசிறந்த 15 வீரர்களைக் கொண்ட இலங்கைக் கிரிக்கெட் அணியில் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இணைக்கப்பட்டுள்ளார்.

''50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் 10 ஓவர்களை முழுமையாக வீசக்கூடிய உடற்தகுதி 100 வீதம் லசித் மலிங்கவுக்கு இருக்கின்றமையை உறுதிசெய்து கொண்ட பின்னர் லசித் மலிங்கவை அணியில் இணைத்துக் கொண்டுள்ளோம்''.- என்று தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணியை உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவிக்கும் நிகழ்வு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெரிவுக் குழுத் தலைவராக கடந்த 3 வருடங்களில் அணி ஒன்றைத் தெரிவு செய்வதற்கு இம்முறையே தான் பெரும் சிரமத்தை எதிர்கொண்டேன்.

இங்கிலாந்தின் சுவாத்திய நிலை, ஆடுகளங்களின் தன்மை ஆகியவற்றை பிரதானமாகக் கவனத்தில் கொண்டே 15 வீரர்களைக் கொண்ட அணியையும் 2 தயார்நிலை வீரர்களையும் தெரிவு செய்தோம்.

ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு இலங்கை அணியின் தலைவராக அஞ்சலோ மத்தியூஸையும் உதவி அணித் தலைவராக உப்புல் தரங்கவையும் நியமித்துள்ளோம்.

இவர்கள் இருவருக்கும் நிறைய பொறுப்புக்கள் இருக்கின்றன. இவர்களுடன் ஏனைய 13 வீரர்களும் தேசத்திற்காக 100 வீத திறமையை வெளிப்படுத்தி நாட்டுக்கு புகழீட்டிக்கொடுக்க முன்வருவார்கள் என நம்புகின்றோம்.

பத்து ஓவர்களை வீசக்கூடிய உடற்தகுதி லசித் மலிங்கவிடம் இருக்கிறது என்று மருத்துவ சான்றிதழைப் பெற்ற பின்னரே அவரை அணியில் இணைத்துக்கொண்டோம்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அனுபவசாலியான அவரது பிரசன்னம் அணிக்குத் தெம்பூட்டும் என நம்புகின்றோம். மேலும் அணிக்கு பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குவேன் என்று மலிங்க உறுதி வழங்கியுள்ளார்.- என்று சனத் ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக பல்லேகலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலேயே லசித் மலிங்க கடைசியாக விளையாடியிருந்தார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நான்கு பந்துகளில் நான்கு விக்கெட்டுகளைக் (தென்னாபிரிக்காவுக்கு எதிரானது) கைப்பற்றிய ஒரே ஒரு வீரர் மலிங்க ஆவார். அத்துடன், மூன்று சந்தர்ப்பங்களில் ஹெட்ரிக் முறையில் விக்கெட்டு களை வீழ்த்திய ஒரே ஒரு வீரரும் மலிங்க ஆவார். எனவே அவரது




வருகை இலங்கை அணியை மேலும் பலப்படுத்தும் என நம்பப்படுகின்றது.

உபாதை காரணமாக 12 மாதங்கள் ஓய்வு பெற்று வந்த லசித் மலிங்க தனது சர்வதேச இருபது 20 மீள் வருகையில் பங்களாதேஷுக்கு எதிராக தனது முதலாவது ஹெட்ரிக்கை பதிவு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல் போட்டிகளில் அவர் மேடு பள்ளங்களை சந்தித்துவருகின்றபோதிலும் சர்வதேச போட்டிகளில் அவரது ஆற்றல் சிறப்பாக அமைந்துள்ளமையை காணலாம்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணியில் 6 துடுப்பாட்டக்காரர்கள், 4 சகலதுறை வீரர்கள், 4 வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு சுழல் பந்துவீச்சாளர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இலங்கை அணித் தெரிவை முன்னிட்டு அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விடுகை பெற்று இலங்கை வந்திருந்தார். அவருடன் இணைந்து தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜயசூரிய, தெரிவுக் குழு உறுப்பினர் ரொமேஷ் களுவித்தாரண, வெளிநாடுகளில் இருக்கும் அசன்க குருசின்ஹ, ரஞ்சித் மதுரசிங்க ஆகியோரிடையே நடைபெற்ற விரிவான வீடியோ கலந்துரையாடலின் நிறைவிலேயே இறுதி அணி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு அதி சிறந்த அணியை தெரிவாளர்கள் பெயரிட்டுள்ளனர் என்றும் இங்கிலாந்துக்குச் சென்று வெற்றி பெறுவதே தமது குறிக்கோள் எனவும் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"இங்கிலாந்துக்குச் செல்வதற்கு முன்னர் இலங்கையில் கடுமையான பயிற்சிகளில் ஈடுபடவுள்ளோம். ஏனெனில், சம்பியன்ஸ் கிண்ணத்துக்காக எம்மைத் தயார் செய்யும் பணிகள் எமது நாட்டில்தான் ஆரம்பிக்கின்றன. கண்டியில் தீவிர பயிற்சிகளில் ஈடுபடவுள்ளோம்.

அதன் பின்னர் இங்கிலாந்தில் 12 தினங்கள் பயிற்சியில் ஈடுபடுவோம். எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள அணி மிகத் திறமைவாய்ந்தது. எனவே, திறமையை வெளிப்படுத்தி கிண்ணத்தை இலங்கைக்கு மீண்டும் கொண்டு வருவதே எமது குறிக்கோள்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி முதல் கண்டியில் பயிற்சியில் ஈடுபடுவதுடன் 18ஆம் திகதி இங்கிலாந்துக்குப் பயணமாகவுள்ளது.

அங்கு ஸ்கொட்லாந்துக்கு எதிராக இரண்டு சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் அதன் பின்னர் இரண்டு பயிற்சிப் போட்டிகளிலும் இலங்கை விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகளில் வீரர்கள் வெளிப்படுத்தும் திறமைகளின் அடிப்படையிலேயே இறுதி பதினொருவர் தீர்மானிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# நீதிமன்றத்தில் சரணடைந்தார் திலகரத்ன டில்ஷான்!

கொழும்பு, ஏப். 26


இலங்கை அணியின் முன்னாள் வீரர் திலகரத்ன டில்ஷான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

வழக்கொன்று தொடர்பில் நேற்று முன்தினம் டில்ஷானுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. இதனால், அவரைக் கைதுசெய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் பிரதம நீதிவான் லால் ரணசிங்க நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

திலகரத்ன டில்ஷானுக்காக ஒருவரும் ஆஜராகாமையால் இந்த வழக்கிற்காக பணம் செலுத்தும் நடவடிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்தநிலையில், நேற்று டில்ஷான் அவரது சட்டத்தரணியுடன் சென்று நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ரோஹித் சர்மாவின் அதிரடி வீணாக

# 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்தது புனே!



வான்கடே, ஏப். 26

10 ஆவது ஐ.பி.எல். தொடரில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு நேற்றுமுன்தினம் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், ஸ்மித் தலைமையிலான ரைசிங் புனே சூப்பர் ஜியண்ட் ஆகிய அணிகள் மோதின.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதையடுத்து புனே அணியின் அஜிங்கியா ரகானே, ராகுல் திருப்பதி ஆகியோர் தொடக்க வீரர் களாகக் களமிறங்கினர்.

இவர்கள் இருவரும் இணைந்து 76 ஓட்டங் களை இணைப்பாட்டமாக சேர்த்து நல்ல அடித்தளம் அமைத்துக்கொடுத்தனர்.

ரகானே 38 ஓட்டங்களும், திருப்பதி 45 ஓட்டங்களும் சேர்த்தனர். எனினும், அவர் களைத் தொடர்ந்து வந்த வீரர்கள் பெரிய அளவில் சோபிக்கவில்லை. அணித் தலைவர் ஸ்மித் 17 ஓட்டங் கள் மட்டுமே அடித்தார். டோனி 7 ஓட்டங்கள், ஸ்டோக்ஸ் 17 ஓட்டங்கள் என மோசமான பங் களிப்பை வழங்கினர்.

கடைசி நேரத்தில் அதிரடியாக விளையாடிய மனோஜ் திவாரி 4 பவுண் டரிகளுடன் 22 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலை யில் ஆட்டமிழந்தார். எனவே, 20 ஓவர் முடிவில் புனே அணி 6 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் மும்பை அணி சார்பில் கரண் சர்மா, பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை எடுத்த னர். ஹர்பஜன் சிங், மிட்செல் ஜோன்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து 161 என்ற வெற்றி இலக்குடன் களம் இறங்கிய மும்பை அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக பட்லர், பார்த்திவ் பட்டேல் ஆகி யோர் களம் இறங்கினர்.

மும்பை அணி சீரான இடைவெளியில் விக்கெட் டுக்களைப் பறிகொடுத்தது. குறிப்பாக முக்கிய வீரர்கள் சோபிக்கத் தவறினர். பார்த் திவ் பட்டேல் 33 ஓட்டங் களையும், பட்டேல் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்தப் போட்டியில் பெரி தும் எதிர்பார்க்கப்பட்ட பொலாட் வெறும் 9 ஓட் டங்களை மாத்திரமே பெற்று ஏமாற்றமளித்தார். எனினும், மறுபுறத்தில் அதிரடி காட்டிய அணித் தலைவர் ரோகித் சர்மா 39 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்து கடைசி ஓவரில் ஆட்டமிழந்தார். இதன் கார ணமாக மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக் கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இதன் காரணமாக புனே அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணியை வீழ்த்தி தனது 4ஆவது வெற்றியை பதிவு செய்தது. அதேபோல் மும்பை அணி தனது இரண்டாவது தோல்வியை சந்தித்தது. முதல் போட்டி யில் வெற்றி பெற்ற புனே அணி பின்னர் 'ஹட்ரிக்' தோல்வியைச் சந்தித்து, தற்போது 'ஹட்ரிக்' வெற் றியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அற்புதமாக பந்து வீசிய பென்ஸ் ஸ்டோக் 4 ஓவர் களில் 21 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக் களைச் சாய்த்தார்.

10ஆவது ஐ.பி.எல் தொடரின் நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் விளையாடிய டோனி, ஐ.பி.எல் இல் மற்றுமொரு மைல்கல்லை எட்டியுள்ளார். இந்தப் போட்டி அவரது 150ஆவது ஐ.பி.எல் போட்டியாகும். அதேபோல் மும்பை அணி யின் தலைவர் ரோஹித் சர் மாவுக்கும் இது 150 ஆவது

## வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு கடிதம் எழுதினார் செரினா!



நியூயோர்க், ஏப். 26

உலகின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை யான செரினா வில்லியம்ஸ் கருவுற்றிருக்கிறார்.

5 மாத கர்ப்பிணியாக இருக்கும் இவர், தனது வயிற்றில் இருக்கும் தனது குழந்தைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

என் அன்பு குழந்தையே...

எனக்குத் தெரியாத பலத்தை நீ கொடுத்துள் ளாய். அமைதி, சமாதானம் இந்த இரண்டு வார்த்தை களின் மெய்யான அர்த் தத்தை எனக்கு கற்பித்தாய். உன்னை சந்திப்பதற்காக என்னால் காத்திருக்க முடிய வில்லை.

ஆனால், அடுத்த ஆண்டு வீரர்கள் பட்டியலில் நான் சேரமுடியவில்லை என்ற போதிலும், உலகின் முன் னணி வீராங்கனையாக நான் இருப்பதை உன் னோடு பகிர்ந்துகொள் கிறேன்.- என எழுதியுள்ளார்.

இதனைத் தனது இன்ஸ்டா கிராம் சமூகவலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஐ.பி.எல். தொடரிலிருந்து பிராவோ விலகினார்!

### அணியில் சேர்க்கப்பட்டார் இர்பான் பதான்





டில்லி, ஏப். 26

மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திர வீரரான பிராவோ காயம் காரணமாக 10 ஆவது ஐ.பி.எல். தொடரி லிருந்து விலகியுள்ளார்.

சென்னை அணியில் கலக்கி வந்த பிராவோ 10 ஆவது ஐ.பி.எல். தொடரில் குஜராத் லயன்ஸ் அணிக் காக ஏலம் எடுக்கப்பட்டார்.

கடந்த டிசெம்பர் 2016 இல் அவுஸ்திரேலியாவில் நடை பெற்ற பிக் பாஷ் இருபதுக்கு 20 தொடரில் விளையாடியபோது பிரா வோவுக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது.

இதற்காக, கடந்த சில மாதங்களாகவே தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அவர் ஒரு போட்டியில் கூட குஜராத் அணிக்காக கள மிறங்காத நிலையில் தற்போது தொடரிலிருந்தே விலகியுள்ளார்.

இந்தநிலையில், அவரது இடத்தை நிரப்பும் மாற்று வீரராக இந்திய வீரர் இர்பான் பதான் குஜராத் அணியில் சேர்க்கப்பட் டுள்ளார்.

# தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் யாழ். யுவதிகள் தங்கப் பதக்கம் வென்றனர்!

கொழும்பு, ஏப். 26

தியகமவில் மஹிந்த ராஜபக்ஷ விளையாட் டரங்கில் நடைபெற்று வரும் கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டி களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் அனித்தாவும், சந்திரசேகரம் சங்கவியும் தங்கப் பதக்கங் களைக் சுவீகரித்துள்ளனர்.





கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற முதல் நாள் போட்டியில், 23 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பழைய மாண வியான ஜெகதீஸ்வரன் அனித்தா 3.40 மீற்றர் உயரம் தாவி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

18 வயதுக்குட்பட்ட பெண் களுக்கான ஈட்டி எறிதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சந்திரசேகரம் சங்கவி 33.05 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன் றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் பவானந்தன் சாத்விகா (2.90 மீ.) வெள்ளிப் பதக் கத்தையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பாலேந் திரன் கிரிஜா (2.90 மீ.) வெண்கலப் பதக்கத் தையும் சுவீகரித்தனர்.

காலைக்கதிர்



## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ் மக்களது காணி விடுவிப்பு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராணுவத்தினருடன்பேசவேண்டியதேவையென்ன என்று கேள்வி எழுப்பியுள்ள அவர், அரசாங்கத்துடனேயே இது விடயமாகப் பேசி கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில்சர்வதேசரீதியாகஉள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எவ்வாறு அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக சிந்திக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதையும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்புரிந்துகொள்ளவேண்டும் எனவும் அவர்தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்சந்திப்பின்போதே அவர் விடயத்தைத்தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காணிகளை விடுவிப்பது தொடர்பாக கடந்த நாள்களில் நான்கு கலந்துரையாடல்கள் கூட்டமைப்பினால் நடத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதியுடன் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கொண்ட பேச்சுகளில் ஜனாதிபதி காணிகள் தொடர்பான தகவல்களை இராணுவத்திடம்தாம்கோரியுள்ளோம் எனவும், எனினும் ஒரு வருடகாலமாக இராணுவம் அந்தத் தகவல்களை வழங்கவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இதேபோன்று இராணுவ தளபதிகளுடன்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நடத்தியகலந்துரையாடலில், ஜனாதிபதி உத்தரவிட்டால்காணிகளைத் தாம் மீளக்கையளித்து விடுவோம் என இராணுவத்தினர் கூறியிருந்தனர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதியும் இராணுவத்தினரும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதான கருத்துக்களை கூறி வருகின்றனர்.

இவற்றைவிட, கடந்த வாரம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் மேலும் சில கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று மாவட்டத் தளபதிகளுடன் இது விடயமாக கலந்துரையாடியிருந்தார்கள்.ஆனால்இவர்களது சந்திப்புக்களில் அவர்களுக்கு எதிர்மறையான பதில்களே கிடைத்திருந்தன.

குறிப்பாக கேப்பாபிலவு பகுதிகளில் விடுவதாக ஒப்புக்கொண்ட பகுதிகளில் கூட இராணுவம் ஆறு மாத கால அவகாசத்தையும், 50 மில்லியன் ரூபாபணத்தையும்கோரியிருக்கின்றது. இத்தகைய நிலையில் மக்களது காணிகளைச் சட்ட விரோதமாக அபகரித்து அக்காணிகளில் இருந்த மக்களது வீடுகள், கட்டடங்களைச் சட்ட விரோதமாக இடித்தழித்து, பின்னர் தமக்கேற்றவாறு கட்டடங்களைச் சட்டவிரோதமாக கட்டிய இராணுவம், தற்போது அக்காணிகளை விடுவிப்பதற்கு கால அவகாசமும் நஷ்டஈடும் கேட்பதானது இராணுவத்தின் 'ரவுடித்தனமான செயற்பாட்டையே காட்டிநிற்கின்றது.

நேற்று முன்தினம் மீள்குடியேற்றஅமைச்சர்தலைமையில் இடம்பெற்ற காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலில்கூட முள்ளிக்குளம்மேற்கு கடற்படைத்தளத்தை விடுவிக்க முடியாது என்ற கருத்தை கடற்படைத் தளபதி கூறியுள்ளார். இதேபோன்று செட்டிகுளத்தில் படையினர் வசமுள்ள ஆறாயிரம் ஏக்கர் காணிகளையும் விடுவிக்க முடியாது எனவும் அவர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் மக்களது காணி விடுவிப்பு தொடர்பாகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இராணுவத்தினருடன் பேச வேண்டிய தேவையேன்? அல்லது அவ்வாறு பேசுவது சரியானதா? என்ற கேள்வியெழுந்துள்ளது. காணிவிடுவிப்புத் தொடர்பாகப் பதிலளிக்க வேண்டியவர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டஜனாதிபதி, பிரதமர் ஆகியோரே. எனவே தமிழர்தரப்புஇவர்களுடனேயே பேச வேண்டும். இதனை விடுத்து இராணுவத் தரப்போடு பேசுவது இப் பிரச்சினைக்கான தீர்வைத்தராது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேசி அரசு மூலம் மக்களது காணிகளை விடுவிக்க முடியும் அல்லது விடுவிக்க வேண்டும் என்றகொள்கைரீதியானதீர்மானத்தை எடுக்க வேண்டும். இதனைவிடுத்து,மாற்றுக்காணிகளையும் தமது படைத் தளங்களை அகற்றுவதற்கு நஷ்டஈட்டையும்படைத்தரப்புக்கோருவது ஒரு போதும் ஆக்க பூர்வமான முடிவைத் தராது.

மேலும் அரசு தமிழ் மக்களது காணிகளை மீளக் கையளிப்போம் எனவும், காணாமல் ஆக்கப்பட்டோர்தொடர்பாகத்தீர்வொன்றை வழங்குவோம் எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலிலே கூறிவந்தாலும் காணி விடுவிப்புத்தொடர்பில், தான்தப்பித்துக் கொள்வதற்கும் காணிகளை மீளக் கையளிப்பதைத் தட்டிக்கழிப்பதற்கும் இராணுவத்தைப் பயன்படுத்த முயல்கின்றதா என்ற கேள்வியெழுந்துள்ளது.

ஏனெனில் அரசு சர்வதேசத்திடம் இரண்டு வருட கால அவகாசத்தை கோரியுள்ளது. இராணுவம் காணிவிடுவிப்பு தொடர்பாக 2021ஆம் ஆண்டுவரை கால அவகாசத்தைக்கோரியுள்ளது.

இத்தகைய நிலையில் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு பின்னர் யார் ஆட்சியமைப்பார்கள் என்பது தெரியாது. இவ்வாறான நிலையில் தற்போது இவ்விடயத்தில், தான் தப்பித்துக்கொள்வதற்கு இத்தகைய அரசு கால அவகாச கோரிக்கையைமுன்வைத்துள்ளதா? இவ்வாறு இராணுவத்தைப் பயன்படுத்தித் தான் தப்பிக் கொள்ள முயற்சிக்கின்றதாஎன்றகேள்விகள்எழுந்துள்ளன. எனவே இது தொடர்பான விடயங்களைத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு - குறிப்பாக தற்போது முடிவுகளை எடுக்கின்ற தமிழரசுக் கட்சி - அரசுடன் பேசி கொள்கை ரீதியான தீர்மானத்தைப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

அவ்வாறில்லாதநிலையில், சர்வதேச ரீதியாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எவ்வாறு அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக சிந்திக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதையும் கூட்டமைப்பின் தலைவர் புரிந்து கொள்ள வேண்டும். - என்றார் அவர். (உ)

## செட்டிகுளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடைசேதத்துக்குள்ளாகியுள்ளது.

திடீரெனக் கடையின் முன்பகுதியில் தீ பற்றிப் பரவிய நிலையில்அப்பகுதியில்இருந்த இளைஞர்கள் ஒன்றுதிரண்டு தீயைக் கட்டுப்படுத்தினர்.

இத் தீவிபத்துக்கு எரிவாயு கசிவே காரணம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. எனினும் இதுவரை செட்டிகுளம் பொலிஸில்முறைப்பாடுபதிவுசெய்யப்படவில்லை எனதெரியவருகின்றது. (உ-100)

## இதன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போர் காலங்களிலும் போர் முடிவுற்ற காலத்திலும் இராணுவத்தை எதிர்த்துப் போராடிய இளைஞர், யுவதிகள், குடும்பத் தலைவர்கள் ஆயிரக்கணக்கில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இராணுவம் சரணடையுமாறு பகிரங்கமாக அறிவித்தது. போர்க் காலத்தில் அவ்வாறானபோராளிகளும் பொதுமக்களும் கூட இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

போர் முடிந்தது என்று 2009இல் அறிவிப்பு வெளியாகியும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்றுதெரியவில்லை. அவர் கள் இன்னமும் இரகசிய இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவுகள் நம்புகிறார்கள். தாய்மார் இறுதியாகத் தெருவோரங்களில் சுட்டெரிக்கும் வெய்யிலில் இரண்டுமாதங்களுக்குமேலாக அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவ்வாறு களத்தில், தங்கள் நிலத்தில், போராடி வரும் தாய்மார்களுக்கும் அவர்கள் கண்ணீருக்கும் அரசுகள் தக்க பொறுப்பைக் கூறாதிருப்பது மிகக் கொடுமையாகும். அப்போதுகண்டிக்கப்படவேண்டும். ஐ.நா.மனித உரிமைப் பேரவை இலங்கை அரசாங்கத்திற்குக் காத்திரமான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்.பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிலைநாட்ட அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

அதே போலவே இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள மக்களின் நிலங்களை விடுவிப்போம் என ஜனாதிபதியும்அரசும்வாக்குறுதி வழங்கியும், முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. அந்த நிலங்களையும் விடுவிக்க வேண்டுமென மக்களும் நிலச் சொந்தக்காரர் களும் போராடி வருகின்றனர்.

இவ்வாறு போராடுகின்ற மக்கள் நாளை வியாழக்கிழமை பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். இப் போராட்டங்களை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அதன் பின்னும் அரசு தீர்வினை வழங்காது விட்டால் அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களும்ஒன்றுகூடிஜனநாயக அறவழிப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டி வருமென அரசுக்கும் அறிவிக்கின்றோம். - என்று உள்ளது. (உ)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகயாழ்.போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில், மந்துவில் பகுதியைச் சேர்ந்த நந்தகுமார் லிங்கேஸ்வரன் (வயது - 24)மற்றும் அதேபகுதியினை சேர்ந்த கிறிஸ்தோபர் தினேஷ் (வயது -- 28) ஆகிய இருவருமே வாள்வெட்டுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தனிப்பட்டபகைகாரணமாக இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் 11 பேர் தொடர்புபட்டிருந்தனர் எனக் காயமடைந்தவர்கள் கொடிகாமம் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

## வடக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா எம்.பி., வடக்குமாகாணமுதல்வர்நீதியரசர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் மக்கள் பேரவையினர், சுரேஷ்பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியமக்கள்முன்னணியினர், வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் உட்படப் பல அரசியல்பிரமுகர்கள்ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கியுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குமாறு அவர்கள் பொது மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கிழக்கு முஸ்லிம் தலைவர்களும், மன்னார் முஸ்லிம் பிரமுகர்களும்கூட இந்தப்போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவர்த்தகசங்கமும் நேற்றுக் கூடி இந்த ஹர்த்தால் குறித்து ஆராய்ந்தது. நாளைய போராட்டத்தின்போது கடைகளை முற்றாக மூடி முழு ஆதரவு அளிப்பது என அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்பு, வடமராட்சி கிழக்கு - மருதங்கேணியை மையமாகக் கொண்டு இயங்கும் காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டறியும் அமைப்பு, இலங்கைப்போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை தொழிற்சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் போன்ற பல பொது அமைப்புக்களும் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்கக் கோரியுள்ளன. (உ)

## வடக்கிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது அங்கு கருத்து வெளியிடும் போது இத் தகவலை அமைச்சர் விடுத்தார்.

இவ்விடயம்தொடர்பாகஅவர் மேலும் தெரிவிக்கையில் :-

கடந்த ஆண்டுக்கான மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து முலலைதீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் தமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட நோயாளர் காவு வண்டிகளை 90 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்திருந்தன.

இந்த அம்புலன்ஸ்கள் அவசர நோயாளர் சேவைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

மேலும், இந்த வருடம் மத்திய அரசாங்கத்தில் இருந்து 21 அம்புலன்ஸ்கள் வடமாகாண சுகாதார அமைச்சிற்கு வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு வழங்கப்படும் அம்புலன்ஸ்கள் மாவட்டத்திற்கு இரண்டு வீதம் அவசர நோயாளர் சேவைக்காக மாத்திரம் பயன்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அவசர நோயாளர்அம்புலன்ஸ்சேவை எதிர்காலத்தில் மேலும் திறனுள்ள வகையில் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். - என்றார். (உ)

## வன்னிப்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி) ஆயிரம் பேர் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்குமாதாந்தம் 35 ஆயிரம் ரூபா சிவில் பாதுகாப்புத் திணைக்களம் வழங்கி வருகின்றது. இந்த ஊழியர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்கு வடக்கு மாகாண சபை தயார் என்றால் அந்தப் பண்ணைக் காணிகளை வடக்கு மாகாணசபையிடம்ஒப்படைக்கத் தாம் தயார் என்று பாது காப்பு அமைச்சு தெரிவித்துள் ளதாம்.

நேற்றுமுன்தினம்பாதுகாப்பு அமைப்பின் அமைச்சர் டிஎம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற காணிகள் விடுவிப்புத்தொடர்பு ஆராய்வதற்கான - கூட்டத்திலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (உ)

## படைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேண்டும்' - என்ற கோரிக்கையுடன் முன்வைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு :-

பலவந்தமாகக் காணாமற்போகச்செய்யப்பட்டவர்களின் உறவுகளும், இராணுவ ஆக்கிரமிப்பால் தமது காணிகளை இழந்த மக்களும், தமது கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாகவும் தமது கோரிக்கைகளை வெளியுலகுக்கு வெளிப்படுத்தவும் , வடக்குக் கிழக்கெங்கும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

**நீதிக்கான பொறிமுறை**

மக்கள் அணி திரள்வுப் போராட்டங்கள், எமக்கான நீதிக்கான, ஒரு காத்திரமான செயன்முறை என்பதில் தமிழ் மக்கள் பேரவை ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அதனை வலியுறுத்தியும் வந்துள்ளது.

காலாகாலமாக, வாழ்வின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிவரும் இந்த மக்களின் கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் தமிழ் மக்கள் பேரவை தனது பூரண ஆதரவை வழங்குகிறது.

அத்தோடு, இந்த மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு அனைத்து மக்கள் அமைப்புகளும் ஆதரவு தெரிவிக்கவேண்டும் எனவும் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுக்கிறது.

தொடர்ச்சியாகப் பல தரப்புகளாலும் ஏமாற்றத்தைச் சந்தித்து வந்த மக்கள், தமக்கான குரலைத் தாமே எழுப்ப முன்வந்திருப்பதும்,தமதுகோரிக்கைகளில் மிகத்தெளிவாகவும், உறுதியாகவும்இருந்துபோராடுவதும் எம்அனைவருக்கும்ஒரு முன்னுதாரணமானதாகும்.

எனினும், இந்த மக்களின் தொடர்ச்சியான போராட்டமானது, தனியே இந்த மக்களுக்கானது மட்டுமல்ல. மாறாக, அரச அடக்குமுறைகளால் அநீதிக்குட்படுத்தப்பட்ட எங்கள் அனைவரினதும் ஒட்டுமொத்தக் குறியீட்டுக்குரலாகவே நாம் இதனைக் கருதவேண்டும். நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமே தொடர்ச்சியாகப் போராடுவது என்பது, எமக்கான சமூகப் பொறுப்புணர்வைக் கேள்விக்குட்படுத்துகின்றது .

இம்மக்களின் போராட்டத்திற்கு அனைத்து மக்களும் தம்மாலான பங்களிப்பை வழங்கி, எம் மக்களின் நீதிக்கான குரல் மேலும் உறுதிப்படவும் சர்வதேசத்தின் காதுகளை எட்டவும் நாம் செயற்படவேண்டும்.

**பேரவை வலியுறுத்து**

காணாமல் போகச்செய்யப்பட்டவர்களின் உறவுகள், உடல், உள சமூக மற்றும் வாழ்வாதார ரீதியில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் அழுத்தங்களும் மிகக்கொடூரமானவை. இவர்களுக்கான பொறுப்புக்கூறல் காலதாமதமின்றிச் செய்யப்படவேண்டும். தடுத்துவைக்கப்பட்டவர்களின் பட்டியலை உடனடியாக வெளியிடுதல்உட்பட இந்த மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தமிழ் மக்கள் பேரவை ஏற்றுக்கொண்டு, மீள வலியுறுத்துகின்றது.

அதுபோலவே, ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றான வாழ்விடத்தை வன்முறையினூடு ஆக்கிரமித்து வைத்திருந்து கொண்டு, நிலத்தின் உரிமையாளர்களைத் தொடர்ந்தும் வீதிகளில் விட்டிருக்கும் அநீதியும் நல்லாட்சி எனக்கூறப்படும்,இந்த அரசாங்கத்திலும் தொடர்கிறது.

இந்த நாட்டின் அனைத்து நிர்வாகங்களுக்கும் பொறுப்பான இலங்கை அரச உயர் பீடமானது, ஆக்கிரமிக்கப்பட்ட மக்

(03 பக்கம் பார்க்க..)

# இந்து பக்தர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்; விரிவான விசாரணைகள் நடத்துமாறு கோரிக்கை!

## இலங்கை மலையக இந்துக் குருமார் ஒன்றியம் ஜனாதிபதி,பிரதமர், இந்துசமய விவகார அமைச்சர் ஆகியோருக்குக் கடிதம்

கொழும்பு, ஏப்.26

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற இந்து பக்தர்களுக்கு, நந்திக் கொடியை ஏந்த வேண்டாம் என்றும், சிவனுக்குரிய கோஷங்களை எழுப்ப வேண்டாம் என்றும் அச்சுறுத்தப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் முழுமையானதொரு விசாரணைக்கு உத்தரவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், இலங்கை மலையக இந்துக் குருமார் ஒன்றியம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்துசமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகிய முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு கடிதம் அனுப்பவுள்ளது.

தமது ஒன்றியத்தின் சட்ட ஆலோசகர் ஊடாக இதற்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகிறது என்றும், இது தொடர்பில் பொலிஸார் பக்கச் சார்பாக நடந்து கொண்டமை கவலையளிக்கின்றது என்றும் இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் சிவஸ்ரீ வேலு சுரேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்ற இந்து பக்தர்களுக்கு, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குழுவொன்றால் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை மலை உச்சியில் வைத்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸாரும், பக்தர்களுக்கு எதிராகச் செயற்படும் வகையில் செயற்பட்டதால் தமக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில் அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிடவில்லை.

எனினும், யாத்திரையை ஏற்பாடு செய்திருந்த, இலங்கை மலையக இந்துக் குருமார் ஒன்றியத்திடம் மேற்படி பக்தர்கள் முறையிட்டனர்.

இது தொடர்பில் அந்த ஒன்றியத்தின் ஸ்தாபகரும் பொதுச் செயலாளருமான சிவஸ்ரீ வேலு சுரேஸ்வர குரு தெரிவித்துள்ளவை வருமாறு:-

நந்திக்கொடியை ஏந்தவேண்டாம் எனவும், 'நமசிவாய' என்ற சிவ நாமத்தை உச்சரிக்க வேண்டாம் எனவும் அச்சுறுத்தப்பட்டுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நல்லிணக்கம், இன ஐக்கியம் என்று பேசப்பட்டுவரும் கால கட்டத்தில் இப்படியொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை கவலையளிக்கின்றது. பொலிஸாரும் பக்கச் சார்பாகச் செயற்பட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி, நீதியை நிலை நாட்ட வேண்டும்.

எமது அமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பவுள்ளது. அத்துடன், சிவனொளிபாதமலைக்கு வரும் இந்து பக்தர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.-என்றார். (ஐ)

# ஆலயங்களில் மஹோற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் (நாச்சிமார்கோவில்) ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சப்பை ரதமும்,9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறு நாள் 10 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல்10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை அட்சய திருதியை நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். (ச)

★★★

திருநெல்வேலி,ஏப்.26

திருநெல்வேலி அரசடி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பை ரதமும், மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், மறு நாள் 11ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவனமும் இடம்பெறும். (ச)

★★★

அச்சுவேலி,ஏப்.26

அச்சுவேலி இடைக்காடுப்பதி திருவருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழவும் மறுநாள் திங்கட் கிழமை சப்பை ரதமும் திருவிழாவும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ)

# முதலமைச்சர் விருது; கலைஞர்களுக்காக!

யாழ்ப்பாணம்.ஏப்.26

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக் களத்தால் 2017 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைத்துறையினரிடம் இருந்தே மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைத்துறையில் சேவையாற்றிய கலைஞர்களின்பெயர், முகவரி, தொலை பேசி இலக்கம் மற்றும், கலை வரலாற்றுடன் பரிந்துரை செய்து, நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதிக்கு முன்பாக ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ச)

# தடைப்பட்டிருந்த எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின

## பெற்றோலிய அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.26

பெற்றோலிய தொழிற் சங்கத்தினரின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக தடைப்பட்டிருந்த எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளனஎன்றுபெற்றோலிய அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நேற்றுப் பகல் தொடக்கம் சீராக முன்னெடுக்கப்பட்டதுஎன்று அமைச்சர் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலிய ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்குவது தொடர்பில், பிரதமரின் செயலாளரால் எழுத்து மூலம் வாக்குறுதி வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோலியத் துறை தொடர்பாக இந்தியாவுடன் முன்னெடுக்கப்படும் உடன்படிக்கை அரசியல்ரீதியானது என்றும், அது தொடர்பான உடன்படிக்கையில் ஈடுபட முன்னர் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய தரப்புகளுடன் கலந்துரையாடப்படும் எனவும் பிரதமரின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

அம்பாந்தோட்டைகளஞ்சியத் தொகுதி சம்பந்தமாகவும் தொழிற் சங்கங்களின் யோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடலை நடத்துவதற்கும், அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் அமைச்சரவை உப குழுவுடன் பேச்சு நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு பணிகளை நவீன மயப்படுத்துவதற்கும் பொருளாதாரக்குழுவுக்குத் தம்மால் யோசனை முன்வைப்பதற்கும் காரணங்களை உள்ளடக்கிய கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிப்பதாக பிரதமரின் செயலாளரால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பேரில், தமது பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிடுவதற்கு தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்தன என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். (ஐ)

# பொதுக்கூட்டம்

கிளிநொச்சி, ஏப்.26

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (ச)

# நாளை மின்தடை



யாழ்ப்பாணம், ஏப்.26

நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6.30 மணிவரை வவுனியா. பிரதேசத்தில் தேக்கவத் தைப் பகுதியிலும் மன்னார் பிரதேசத்தில் உமணகிரி, நறுவிலிக்குளம், ஆவனம் வஞ்சியன்குளம் ஆகிய இடங்களிலும் - மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# கம்பளிப்பூச்சிகளைப் பயன்படுத்தி சூழல் மாசடைதலைத் தடுக்க முடியும்

பிளாஸ்ரிக்கை அரிக்கக்கூடிய கம்பளிப்பூச்சி உள்ளிட்ட சில உயிரினங்களை பயன்படுத்தி சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தேன்கூடுகளின் மெழுகை உண்ணும் விட்டில் பூச்சியின் புழுக்கள் பிளாஸ்ரிக்கை அழிக்கக் கூடியவை என்று கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் பூச்சியினங்கள் பிளாஸ்டிக்கில் உள்ள இரசாயன பிணைப்புக்களை இலகுவாக உடைக்கக் கூடியவை என ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் ஒவ்வொரு வருடத்திலும்8 கோடி தொன்கள் பிளாஸ்ரிக் பொலித்தீன் உற்பத்தி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த பிளாஸ்ரிக் பொலித்தீன் வகைகள் பொலித்தீன் பைகள் மற்றும் உணவுப் பொதிகள் போன்றவற்றின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதுடன் இவை முற்றாக உக்குவதற்கு பல நூற்றாண்டு காலம் செல்கின்றது.

இருப்பினும் விட்டில் பூச்சிகளின் புழுக்கள் சுமார் ஒரு மணித்தியாலத்துக்குள் பிளாஸ்ரிக் பையில் துளைகளை உருவாக்கி விடுகின்றன.

இந்தச் செயற்பாட்டை மேலும் நுணுக்கமாக ஆராய்ந்து பிளாஸ்ரிக் கழிவுகளால் உலகில் நிலவும் சிக்கலை குறைப்பதற்கான தொழில்நுட்பத் தீர்வை வழங்க தாம் தயாராகவுள்ளனர் என்று ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், பிளாஸ்ரிக்கின் இயற்கை பிரிந்தழிக்கையின் பின்னணியில் உள்ள இரகசியங்களை கண்டறிந்து அந்தச் செயன்முறையை துரிதப்படுத்த எதிர்பார்த்துள்ளனர் என்றும் விஞ்ஞானிகள் கூறிகின்றனர். (ஐ)

# அரச பஸ்ஸுக்கு கல் வீசிய மூவர் தொடர்பாக விசாரணை

## காயமுற்ற நடத்துநர் ஆஸ்பத்திரியில்


சிலாபம் - பங்கதெனிய பகுதியில் அரசபஸ் ஒன்றுக்குக் கல்வீசியதாக கூறப்படும் மூவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் அந்த பஸ்ஸின் நடத்துநர் காயமடைந்த நிலையில், சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீதியோரத்தில் இருந்த மூவரே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட பஸ்ஸின் சாரதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# மீதொட்டமுல்லவில் உயிரிழந்த மக்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி



மீதொட்டமுல்லை குப்பை மேட்டுச் சரிவினால் உயிரிழந்த உறவுகளுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் அஞ்சலி செலுத்தப்பட்டது. உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் பல்கலைக் கழக சமூகம் தெரிவித்தது.

இந்த அஞ்சலி நிகழ்வில், கலைப்பீட பீடாதிபதி எஸ்.சிவநாதன் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இச்சம்பவத்திற்கு அரசாங்கம் முழுப்பொறுப்பை ஏற்கவேண்டும். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டும். இது போன்ற அனர்த்தங்கள் இனிமேலும் இடம்பெறாதிருக்க ஆவன செய்ய வேண்டும். – என்று யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவர் ஒன்றியத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.